பக்கங்கள் 12

விலை ரூ. 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 38
கதிர் : 159

வியாழக்கிழமை 04 மே 2023

சித்திரை 21 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054






### தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள

# சட்டவிரோத விகாரையை அகற்ற தொடர் போராட்டம்

## பொலிஸார் கடும் அச்சுறுத்தல்

## கொட்டகைகளும் பலவந்தமாக அகற்றம்

## நேற்றிரவு பெரும் பதற்றம்

யாழ்ப்பாணம், மே 4

வலி.வடக்கு தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்படும் விகாரையை அகற்றக்கோரித் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களைப் பொலிஸார் அச்சுறுத்தி அங்கிருந்து அகற்ற முற்பட்டதுடன், போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அமைத்திருந்த கொட்டகைகளையும் பலவந்தமாக அகற்றியதால் நேற்றிரவு அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது. 'போரில் வென்ற எங்களுக்கு உங்களை என்ன செய்வது என்று தெரியும்' எனக் கூறிப் பொலிஸார் கடுமையான முறையில் நடந்து கொண்டனர் என்று போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் தெரிவித்தனர். »11

### இனப்பிரச்சினை தீர்வு விடயம்

## அடுத்தவாரம் தமிழ்க் கட்சிகளை சந்திக்கிறார் ஜனாதிபதி ரணில்



யாழ்ப்பாணம், மே 4

இனப்பிரச்சினைத் தீர்வு விடயம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையில் அடுத்த வாரம் 11, 12 மற்றும் 13ஆம் திகதிகளில் சந்திப்பு »11

## மீற்றர் இல்லாத ஓட்டோக்களுக்கு ஓகஸ்ட் முதல் தடை!

யாழ்ப்பாணம், மே 4

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் கட்டணமானி (மீற்றர்) பொருத்தப்பட்ட முச்சக்கர வண்டிகள் மட்டுமே சேவையில் ஈடுபட அனுமதி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. »11

### வனஉயிரிகள், வனவளத் திணைக்கள

## காணி விவரங்களில் தவறான தகவல்கள்

### ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டு

கிளிநொச்சி, மே 4

கிளிநொச்சி மாவட்டத்தில் வனஉயிரிகள் மற்றும் வனவளத் திணைக்களங்களின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட வேண்டிய காணிகள் தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் காட்சிப்படுத்தப்பட்ட விவரங்கள் தவறு என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சி.சிறீதரன் ஆகியோர் சுட்டிக்காட்டியுள்ளனர். »11

### அரியாலை, பூம்புகாரில்

## ஆசிரியர்களுக்கு அச்சுறுத்தல்: ஒருவாரம் பாடசாலை பூட்டு!

யாழ்ப்பாணம், மே 4

அரியாலை, பூம்புகார் அரசினர் பாடசாலை கடந்த ஒரு வாரமாக மூடப்பட்டுள்ள நிலையில், மாணவருக்கான கல்வி நடவடிக்கைகள் அரியாலை சிறிபாரதி பாடசாலையில் »10

### கிளிநொச்சி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில்

# அதானி குழுமத் திட்டத்துக்கு அனுமதி வழங்கப்படவில்லை

கிளிநொச்சி, மே 4

பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் காற்றாலை மூலமான மின் உற்பத்தி நடவடிக்கை மேற்கொள்வதற்கு சமர்ப்பிக்கப்பட்ட அதானி குழுமத்தின் விண்ணப்பத்துக்கு கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு நேற்று அனுமதி வழங்கவில்லை.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் அதானி குழுமத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி இருவர் கலந்துகொண்டனர்.

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் அந்த நிறுவனம் காற்றாலை மூலமான மின் உற்பத்தியை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது. அதற்கான மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் அனுமதி கோரப்பட்டிருந்தது. அதற்கு மாவட்ட ஒருங்கிணைப்புக் »11

## யாழ்ப்பாணத்துக் கதலி பறக்கின்றது டுபாய்க்கு

யாழ்ப்பாணம், மே 4

கதலி வாழைப்பழத்தைப் பதப்படுத்தி ஏற்றுமதி செய்யும் திட்டம் நேற்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பதப்படுத்தப் »10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இனப்பிரச்சினைக்குத் தீர்வு விடயம்

# வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள்

### *தமிழ்த் தலைவர்கள் ஜனாதிபதிக்கு பதில்*

**கொழும்பு, மே 4**

**இனப்பிரச்சினைக்கு இந்த வருடத்தின் இறுதிப்பகுதிக்குள் தீர்வொன்று வழங்கப்படும் என்றும் இதற்காக அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்றும் ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ள நிலையில், இந்த விடயத்தில் இதுவரை வழங்கிய வாக்குறுதிகளை ஜனாதிபதியே நிறைவேற்றவேண்டும் என்றும் தமிழ்த் தலைவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

**தூர விலகவில்லை**

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சுமந்திரன் தெரிவித்ததாவது:

இனப்பிரச்சினைக்கான தீர்வை வழங்குவது குறித்து அண்மைய காலங்களில் ஜனாதிபதியால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அனைத்துக் கூட்டங்களிலும் நாம் பங்கேற்றிருப்பதுடன், அதனை முன்னிறுத்திய ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் சகல ஒத்துழைப்புக்களையும் வழங்கியிருக்கின்றோம். எனவே இவ்விவகாரத்தைப் பொறுத்த மட்டில் நாம் ஒருபோதும் தூரவிலகி நிற்கவில்லை. இனப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்குவேன் என்று பேச்சளவில் கூறுவதை விடுத்து, அதற்குரிய நடவடிக்கைகளை ஜனாதிபதி உடனடியாக எடுக்க வேண்டியது அவசியம் - என்றார்.

**திட்டம் என்ன?**

'பொருளாதார நிலைமையைச் சீர் செய்வதற்காக தமிழ்த் தரப்புகளை ஏமாற்றாமல், நாட்டின் பின்னடைவு நிலைக்கு இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படாதமையே முதற் காரணம் என்பதை சிங்களப் பேரினவாதக் கட்சிகளுக்கும், சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் கூறி அவர்களையும் இணைத்து ஒரு தீர்வுத் திட்டத்தை நாடாளுமன்றத்திலும், தமிழ் மக்களிடமும் முன்வைத்து விட்டு தமிழ்த் தரப்புகளுடன் பேசினால் நாங்கள் ஒருபோதும் பேச்சுக்குப் பின்னடிக்கவோ, விலகி நிற்கவோ மாட்டோம்' என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோ.கருணாகரம் ஜனா தெரிவித்தார்.

**13 ஐ நிறைவேற்றுக**

தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் இதயசுத்தியுடன் செயற்படாமல், பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்று அறிக்கை விடுவதால் மட்டும் நாட்டின் நெருக்கடி தீர்ந்துவிடாது. ஜனாதிபதி இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் இதயசுத்தியுடன் செயற்படுகிறார் என்ற நம்பிக்கையை தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் விதத்தில் அவரது செயற்பாடுகள் அமையவேண்டும். இன்றைய காலகட்டத்தில் புதிய அரசமைப்பு ஒன்றைக் கொண்டுவருவதற்கான உடனடி ஏதுநிலைகள் இல்லை. எனவே, முதற்கட்டமாக தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெறும் பொருட்டு, அரசமைப்பில் உள்ள பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும்என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

**சுயநிர்ணயமே தீர்வு**

தமிழ் மக்களினுடைய பிரச்சினைகளை வருட இறுதிக்குள் தீர்ப்பதாக ஜனாதிபதி கூறியதை நான் வரவேற்கிறேன். ஆனால் 75 வருடப் பிரச்சினையை இந்த 7 மாத காலத்துக்குள் அவர் எப்படித் தீர்க்கப்போகின்றார்? என்பதுதான் பிரச்சினையாகக் காணப்படுகின்றது. பிரச்சினைக்குத் தீர்வு எங்களுக்கு தரும் சலுகைகளை நாங்கள் ஏற்றுக்கொள்வது அல்ல. எங்களுக்குத் தேவையான உரிமைகளை உரித்துக்களை அவர் வழங்கவேண்டுமென்பதுதான் எங்களுடைய கோரிக்கை. 13 ஆவது திருத்தச் சட்டம் எங்களுடைய பிரச்சினைக்குத் தீர்வாகாது. ஒருவேளை 13ஆவது திருத்தச் சட்டத்தை அவர் அமுல்படுத்துவதற்கு முன்வருவதாக இருந்தால் அது ஒரு தற்காலிகத் தீர்வே. அதைவைத்து தமிழ் மக்களினுடைய பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள முடியாது. எங்களின் நிரந்தரத் தீர்வாக சுயநிர்ணயமே அமைய வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார். (ம-125)

## மானிப்பாய் - காரைநகர் வீதி சீரமைப்பு இப்போதைக்கில்லை

யாழ்ப்பாணம், மே 4

மானிப்பாய் - காரைநகர் 'காப்பெற்' வீதி சீரமைப்புப் பணிகள் தற்போது இடம்பெறமாட்டாது என்று வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொறியியலாளர் இளங்கீரன் தெரிவித்தார்.

பொதுமக்கள், வாகன ஓட்டுநர்கள், வலிகாமம் மேற்கு, தென்மேற்கு, காரைநகர் மக்கள் எனப் பலரும் இந்த வீதிச் சீரமைப்புத் தொடர்பில் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ள நிலையில், இது தொடர்பில் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதார நெருக்கடியின் காரணமாக இலங்கையில் உள்ள அனைத்து 'காப்பெற்' வீதி புரமைப்புக்களும் நிறுத்தப்பட்டுள்ளன. அந்தவகையில் தற்சமயம் வீதி அபிவிருத்தி அதிகாரசபை குறித்த வீதியின் தற்காலிக புனரமைப்பை மட்டுமே மேற்கொள்ளவுள்ளது. 'காப்பெற்' புனரமைப்பு தற்சமயம் இடம்பெறாது - என்றார். (ம-125)

## வாழைப்பழ ஏற்றுமதியில் வருவாயை ஈட்ட இலக்கு!

### *விவசாய அமைச்சு செயற்றிட்டம்*

கொழும்பு, மே 4

இலங்கையின் முதலாவது சேதன வாழை அறுவடை, அடுத்த சில நாள்களில் டுபாய் சந்தைக்கு ஏற்றுமதி செய்யப்படவுள்ளது. இதற்கென அறுவடை மற்றும் பதப்படுத்தல் நடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு சனிக்கிழமையும் டுபாய் சந்தைக்கு 12 ஆயிரத்து 500 கிலோ வாழைப்பழம் ஏற்றுமதி செய்யப்படவுள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து வாராந்தம் 25 ஆயிரம் கிலோ சேதன வாழைப் பழங்களை ஏற்றுமதி செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தற்போது நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் ராஜாங்கனை மற்றும் யாழ்ப்பாணத்தில் வாழைப்பழங்களை ஏற்றுமதி செய்வதற்கான நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. யாழ். வாழைத்திட்டத்தை இயற்கைப் பயிராக ஊக்குவிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எம்பிலிப்பிட்டிய மற்றும் செவனகல வாழைதிட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் வாழை ஏற்றுமதி பதப்படுத்தும் நிலையத்தை அம்பாந்தோட்டையில் பரவகும்புக்க அல்லது அதனை அண்மித்த பகுதிகளில் நிறுவ விவசாய அமைச்சு திட்டமிட்டுள்ளது என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டார். (ச-இ)




## ஊடகப் படுகொலைகளுக்கு நீதி நிலைநாட்டப்படவேண்டும்

### *யாழ்ப்பாணத்தில் நேற்றுப் போராட்டம்*

யாழ்ப்பாணம், மே 4

சர்வதேச ஊடக சுதந்திர தினமான நேற்றையதினம், யாழ்ப்பாணம் ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் ஊடக அமையத்துக்கு முன்பாக நேற்று நண்பகல் 12 மணியளவில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஊடக சுதந்திரத்தை வலியுறுத்தியும், படுகொலை செய்யப்பட்ட, காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதிகோரியும், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் ஆபத்தான அம்சங்கள் நீக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தியும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ம-125)

## மின்னல் தாக்கங்கள்: மக்கள் அவதானம்!

### *யாழ். இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் அறிவுறுத்து*

யாழ்ப்பாணம், மே 4

சில தினங்களாக யாழ். மாவட்டத்தில் நிலவிவரும் சீரற்ற காலநிலையால் 22 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த வேளைகளில் ஏற்படும் மின்னல் தாக்கங்களின் போது பொதுமக்கள் அவதானமாகச் செயற்படவேண்டும் என யாழ். மாவட்டச் செயலக இடர் முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் என். சூரியராஜ் தெரிவித்தார்

தற்போதுள்ள காலநிலை தொடர்பில் ஊடகங்களுக்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த தினங்களாக நிலவி வருகின்ற காலநிலை காரணமாக 22 குடும்பங்களை சேர்ந்த 79 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி, மருதங்கேணி, ஊர்காவற்றுறை, கோப்பாய் பிரதேச பிரிவுகளில் பெரும்பாலான பாதிப்புகள் உணரப்பட்டுள்ளன.

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் ஏற்பட்ட மினி சூறாவளி காரணமாக 16 குடும்பங்களைச் சேர்ந்த 56பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 15 வீடுகள் பகுதியளவில் சேதம் அடைந்துள்ளன.

மருதங்கேணி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வெற்றிலைக்கேணி பகுதியில் ஒரு பாடசாலை பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

ஊர்காவற்றுறைப் பகுதியில் ஏற்பட்ட மின்னல் தாக்கத்தின் காரணமாக 5 குடும்பத்தைச் சேர்ந்த 19 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு வீடுகளில் காணப்பட்ட மின் உபகரணங்கள் பாதிப்புற்றுள்ளன.

கோப்பாய் பிரதேசத்தில் மழை காரணமாக ஏற்பட்ட மின்னொழுக்கால் வீடொன்று முற்றாகச் சேதமடைந்துள்ளது.

ஒரு வாரத்துக்கு இந்தக் காலநிலை தொடரும் என எதிர்பார்க்கப்படுவதால் பொதுமக்கள் மிக அவதானமாக இருக்க வேண்டும். மின்னல் தாக்கங்கள் ஏற்படும் நேரங்களில் மின் உபகரணங்கள், தொலைபேசிப் பாவனையைக் கட்டுப்படுத்துவது சாலச் சிறந்தது - என்றார். (ச-26)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### வேட்புமனுத் தாக்கல் செய்த

# அரச ஊழியர்கள் மீண்டும் பணிக்கு!



**கொழும்பு, மே 4**

**உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ள அரச ஊழியர்கள், குறித்த தேர்தல் வட்டாரத்துக்கு வெளியே இடமாற்றம் செய்து கடமையில் ஈடுபடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'2023 ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலுக்காக வேட்பாளர்களாக வேட்புமனு சமர்ப்பித்துள்ள அரச ஊழியர்கள் தொடர்பாக தேர்தல் நடத்தப்படும்வரை, மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தேர்தல்கள் ஆணைக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அவதானிப்புக்கள் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி அரச உத்தியோகத்தர்கள் தாம் வேட்பாளர்களாகத் தேர்தலில் போட்டியிடவுள்ள தேர்தல் வட்டாரத்துக்கு வெளியே இடமாற்றம் செய்யப்பட்டு கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் - என்றார். (ம-44)

# மின்கசிவால் வீடு தீக்கிரை!

### *கோப்பாயில் சம்பவம்*

யாழ்ப்பாணம், மே 4

மின்னொழுக்கு காரணமாக ஏற்பட்ட விபத்தால் வீடொன்று சேதமடைந்துள்ளது.

இந்தச் சம்பவம் யாழ்.கோப்பாய் பகுதியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

இந்த அசம்பாவிதத்தால் வீட்டிலிருந்த நால்வர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடும் முற்றாகச் சேதமாகியுள்ளது. வீட்டிலிருந்த உடைகள், உடைமைகள் என அனைத்தும் தீக்கிரையாகியுள்ளன என யாழ். மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் என்.சூரியராஜா தெரிவித்தார். சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-125)

### *23,200 ரூபாவுக்கு*

# விற்பனையான 'முதலை' பணிஸ்



கொழும்பு, மே 4

இலங்கையில் நடத்தப்பட்ட ஏலம் ஒன்றில் கிம்புலா (முதலை) பணிஸ் ஒன்று 23 ஆயிரத்து 200 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

அநுராதபுரத்தில் கலென்பிந்துனுவெவ பகுதியிலுள்ள மகளிர் சங்கம் ஒன்றால் இந்த கிம்புலா பணிஸ் தயாரிக்கப்பட்டுள்ளது.

2 அடி நீளம், ஒரு அடி அகலம் மற்றும் 3 அடி உயரம் கொண்டு இந்த பணிஸ் காணப்படுகிறது.

குருநாகல் கொலனியா விகாரையில் நடைபெற்ற ஏலத்தில் 23 ஆயிரத்து 200 ரூபாவுக்கு விற்பனையாகியுள்ளது. குறித்த கிராமத்தைச் சேர்ந்த இளைஞர் குழுவொன்றால் பணிஸ் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. (ச-இ)

# வீதியில் எரிந்த ஓட்டோ

சாவகச்சேரி, மே 4

நாவற்குழி வீதியில் பயணித்த முச்சக்கரவண்டியொன்று திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று புதன்கிழமை அதிகாலை வேளையில் நாவற்குழி சந்திக்கு அருகில் கேரதீவு வீதியில் இடம்பெற்றுள்ளது.

திருமண நிகழ்வொன்றில் கலந்துகொள்வதற்காக மன்னாரிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு நால்வர் பயணித்த ஓட்டோவே திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது.

சம்பவத்தின்போது அதில் பயணித்த எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்று சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர். (ச-9)

# தேங்காய், பலாக்காய் திருடிய மூவர் சிக்கினர்

கிளிநொச்சி, மே 4

விசுவமடு மேற்கில் தொடர்ச்சியாக தேங்காய் மற்றும் பலாக்காய்களை வாகனம் மூலம் திருடி வந்த மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் திருட்டில் ஈடுபட்டவேளை காணி உரிமையாளர் மற்றும் அயலவர்களால் அவர்கள் மடக்கிப் பிடிக்கப்பட்டு அருகிலுள்ள தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

சந்தேகநபர்கள் புதுக்குடியிருப்புவாசிகளென்பதால் மேலதிக விசாரணைகளுக்காக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டனர்.

புதுக்குடியிருப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-113)




**ஒரு பள்ளிக்கூடத்துக்கு கெட்டபேர் வரப்பண்ண வேணும் எண்டால் இப்பவெல்லாம் கனக்க கஷ்டப்படத் தேவையில்லை. அங்க படிப்பிக்கிற ஒரு மாஸ்ரர் ஒரு பொம்பிளைப் பிள்ளைக்குப் போனில 'கூடாத' மெசெஜ் அனுப்பிறார் எண்டு ஒரு கதை கட்டிவிட்டால் காணும். அதுக்குப் பிறகு அந்தக் கதை உண்மையா, பொய்யா எண்டெல்லாம் யோசிக்காமல் எல்லாரும் பேஸ்புக்கில நீதிபதியா மாறி, ஆளுக்கொரு தீர்ப்பைச் சொல்லிட்டுப் போடுவினம். அதுக்காக அப்பிடியான மாஸ்ரர்மாரும் இல்லாமலில்லை. கிட்டடியில வலிகாமத்தில ஒரு பெண்கள் பள்ளிக்கூடத்தில இப்பிடி ஒரு மாஸ்ரர் வில்லங்கமா நடந்திருக்கிறார். அதே மாதிரி வவுனியாவிலையும் ஒரு தமிழ் மாஸ்ரர், தன்னட்டப் படிக்கிற பிள்ளையளுக்கு இப்பிடி ஏடாகூடாம மெசெஜ் அனுப்பி பிடிபட்டிருக்கிறார். ஆனால் இப்பிடி ஒண்டிரண்டு மாஸ்ரர்மார் செய்யிற கூத்தால எல்லா மாஸ்ரர்மாரையும் அப்பிடி பிழையா நினைக்கவும் கூடாது.**

**ஆனாலும் இதேபாணியில வேற பள்ளிக்கூடங்களிலையும் தங்களுக்குப் பிடிக்காத மாஸ்ரர்மாரை பலிக்கடாவாக்கிற விளையாட்டும் தொடர்ந்து நடக்கத்தான் செய்யுது. எல்லா இடத்திலயும் இந்தப் பருப்பு வேகாதே. அரியாலைக்கு கிட்ட இருக்கிற பூம்புகார் பள்ளிக்கூடத்திலயும் இப்பிடி ஒரு மாஸ்ரர் நாலாம் ஆண்டுப் பிள்ளையோட போனில கூடாத கதை கதைச்சவர் எண்டு சொல்லி, ஒரு ஊரே கையில கொட்டன்களோட வந்து பெரும் அட்டகாசம். ரீச்சர்மார், சேர்மார் எல்லாரையும் தள்ளி விழுத்தி பெரும் கொல்பாடு. அதுக்குப் பிறகு பொலிஸில முறைப்பாடு போட்டு மூண்டு பேரைப் பிடிச்சாலும், பள்ளிக்கூடக்காரருக்கு பயம் போகேலை.**

**பொலிஸ் விசாரிச்சதில, நாலாம் ஆண்டுப் பிள்ளைக்கு கோல் வந்த போன் நம்பருக்கும் அந்தப் பள்ளிக்கூடத்தில படிப்பிக்கிறவைக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. ஆர் பள்ளிக்கூடத்துக்கு கெட்டபேர் வரவைக்கவேணும் எண்டு நினைச்ச சிலர் இப்பிடி கள்ள நம்பர்ல இருந்து கதைச்சிருக்க வேணும். இல்லாட்டி வேற ஆரோடையும் வீட்டில உள்ளவை கதைச்சிட்டு, தாங்கள் மாட்டுப்படாமல் இருக்க மாஸ்ரர் கதைச்சவர் எண்டு மாட்டியிருக்கவேணும். விசாரணை போய்க்கொண்டிருக்கு. எப்பிடியும் பொலிஸ் ஆளை பிடிச்சிடும். ஆனால் அதுக்காக ஒரு பள்ளிக்கூடத்தையே இடம்பெயர வைச்சு, மாஸ்ரர்மாரையும் மனவுளைச்சலுக்குள்ளாக்கிறதில இதுக்குப் பின்னால இருந்து செய்தவைக்கு, அப்பிடி என்னதான் சந்தோசம் இருக்கப்போகுது?**



- பட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வில்லூன்றி விநாயகரில் பூரணை அனுஷ்டானங்கள்

யாழ்ப்பாணம், மே 4

யாழ்ப்பாணம், வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை சித்திரா பூரணை தீர்த்தோற்சவமும் தர்ப்பணாதி அனுஷ்டானங்களும் நடைபெறவுள்ளன.

காலை 5.45 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகி காலை 6.45 மணிக்கு விசேட பூசை, காலை 7 மணிக்கு வசந்தமண்டபப் பூசை இடம்பெறும்.

தொடர்ந்து காலை 8 மணிக்கு வில்லூன்றி புனித தீர்த்தத்தில் தீர்த்தவாரி இடம்பெறும். காலை 8.30 மணிக்கு தீர்த்த மண்டபத்தில் அனுக்கிரகம் இடம்பெற்று காலை 9.30 மணிக்கு சுவாமி கோயிலுக்கு எழுந்தருளுவார். தீர்த்தவாரி முடிவுற்றபின் அடியார்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர்த் தர்ப்பணங்கள் செய்துகொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என ஆலய தேவஸ்தானம் அறிவித்துள்ளது. (ச)

# திருக்கேதீஸ்வர ஆலய மஹோற்சவம்

மன்னார், மே 4

வரலாற்றுச் சிறப்புமிக்க மன்னார் மாதோட்டநகர் கௌரி உடனுறை திருக்கேதீஸ்வர ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.32 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் மஹோற்சவம் இடம்பெறும்.

எதிர்வரும் 31ஆம் திகதி புதன்கிழமை இரவு பக்தோற்சவமும், ஜூன் மாதம் முதலாம் திகதி வியாழக்கிழமை காலை ஐந்து தேர்கள் வீதியுலா வரும் திருக்காட்சியும், 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை தீர்த்தத் திருவிழாவும், அன்றையதினம் இரவு கொடியிறக்க உற்சவமும், மறுநாள் 3ஆம் திகதி சனிக்கிழமை இரவு மௌனத் திருவிழாவும் நடைபெறும் என்று ஆலய திருப்பணிச் சபையினர் அறிவித்துள்ளனர். (ய-66)

## குருதிக்கொடை

யாழ்ப்பாணம், மே 4

சண்டிலிப்பாய் பிரதேச செயலக நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் வருடாந்த குருதிக் கொடை முகாம் சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை நடைபெறும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ய-66)

● ● ● ●

யாழ்ப்பாணம், மே 4

இளவாலை சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையத்தின் 80 ஆவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு, மாபெரும் குருதிக் கொடை முகாம் நிகழ்வு மேற்படி நிலைய மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணி வரை நடைபெறவுள்ளது. இதேவேளை பல தடவைகள் குருதிக் கொடை வழங்கிய குருதிக்கொடையாளர்களுக்கான கௌரவிப்புக்களும் நடைபெறும் என ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ய-66)

## இலவச கண்புரை பரிசோதனை

சாவகச்சேரி மே 4

யாழ். போதனா மருத்துவ மனை கண் மருத்துவ அலகினரால் வரணி பிரதேச மருத்துவமனையில் இலவச கண்புரை மருத்துவப் பரி சோதனைகள் எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்தப் பரிசோதனையில் வரணி மற்றும் மந்துவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட 50 வயதுக்கு மேற்பட்ட பார்வையில் குறைபாடு காணப்படும் பொதுமக்கள் கலந்து கொள்ளவும். அத்துடன் பரிசோதனையில் கண்புரை காணப்படும் பொதுமக்களுக்கு இலவசமாக சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படும் என கண் மருத்துவ அலகினர் அறிவித்துள்ளனர். (ய-9)

# இரண்டாம் கட்ட அரிசி

சாவகச்சேரி மே 4

தென்மராட்சிப் பிரதேசத்தில் பொருளாதாரத்தில் நலிவடைந்த குடும்பங்களுக்கான இரண்டாம் கட்ட அரிசி விநியோகம் இன்று அனைத்து பிரிவு மக்களுக்கும் விநியோகிக்கப்படவுள்ளன. முதலாம் கட்ட அரிசி விநியோகம் இடம்பெற்ற இடங்களில் இரண்டாம் கட்ட அரிசி விநியோகிக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய-9)

# சோபகிருது

## தமிழ்ப் புத்தாண்டுப் பலன்கள்



### மீனம்

உயர்ந்த லட்சியங்களுடன் வாழ்பவர் நீங்கள். உங்கள் ராசிக்கு 11வது வீட்டில் சோபகிருது புத்தண்டு பிறக்கிறது. சோம்பல் நீங்கும்; புது உற்சாகம் பிறக்கும். கடந்த வருடம் வாட்டி வதைத்த பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் கிடைக்கும்.

22.4.2023 முதல் வருடம் முடியும் வரை குரு பகவான் உங்கள் ராசியை விட்டு விலகுவதால் உத்தியோகத்தில் வேலைச்சுமை குறையும். அலட்சியம் நீங்கும். ஐப்பசி மாதத்தில் வேலைச் சுமை அதிகரிக்கும். இடமாற்றமும் வரக்கூடும். மாசி, பங்குனி மாதங்களில் எதிர்பார்த்த சம்பள உயர்வு, பதவி உயர்வு கிடைக்கும்.

14.4.2023 முதல் 25.8.23 வரை மற்றும் 20.12.2023 முதல் வருடம் முடியும் வரை ஏழரைச் சனி தொடங்கு வதால் அலைச்சல், வேலைச்சுமை, டென்ஷன் அதிகரிக்கும். மறைமுகப் பகை வந்து போகும். கணவன்மனைவிக்குள் சந்தேகங்கள் வரக்கூடும். 26.8.2023 முதல் வருமானம் உயரும்.

ஆண்டின் தொடக்கம் முதல் 7.10.2023 வரை ராகு 2ல் நிற்பதால் பேச்சில் கடுமை வேண்டாம். இழுபறியான வேலைகள் முடிவுக்கு வரும். கேது 8ல் நிற்பதால் திடீர் பயணம், சிறுசிறு விபத்து வந்து நீங்கும். பழைய கசப்பான சம்பவங்கள் மனதை வாட்டியெடுக்கும். 8.10.2023 முதல் வருடம் முடியும் வரை ராகு ராசிக்குள் வருவதால் உடல்நலக்குறைவு ஏற்படலாம்.

3.7.2023 முதல் 18.8.2023 வரை மற்றும் 30.9.23 முதல் 2.11.2023 வரை சுக்ரன் 6ல் அமர்வதால், இந்தக் காலகட்டத்தில் சின்ன சின்ன வாக்கு வாதங்கள் வரக்கூடும்.

4.10.2023 முதல் 17.11.23 வரை செவ்வாய் 8ல் அமர்வதால் சகோதரர்களுடன் பகை வரும். செலவினங்கள் அதிகமாகும்.

வியாபாரிகளே! அதிரடி மாற்றங்கள் செய்து போட்டியாளர்களைத் திகைக்கச் செய்வீர்கள். உங்களைக் கோபப்படுத்தும்படி பேசினாலும், வார்த்தைகளில் நிதானத்தைக் கடைப்பிடியுங்கள்.

உத்தியோகஸ்தர்களே! சகல விடயங்களிலும் ஆர்வத்துடன் பணி புரிவீர்கள். எதிர்பார்த்தபடி சம்பளம் உயரும், சலுகை களும் கிடைக்கும்.

**மொத்தத்தில் இந்தப் புத்தாண்டு சிற்சில பிரச்னைகளைக் கொடுத்தாலும், நிறைவில் இலக்கை நோக்கிய உங்கள் பயணத்தை எளிதாக்குவதாக அமையும்.**

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** வரவும் செலவும் அடுத்தடுத்து வந்தாலும் சமாளித்துவிடுவீர்கள். மகிழும் வாய்ப்பு உண்டாகும். நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு.

**இடபம்:** தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணம் கிடைப்பதால், செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள்.

**கடகம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளிக்கத் தேவையான பணம் கிடைத்துவிடும். உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்காக செலவு செய்ய வேண்டி வரும். உற்சாகம் ஏற்படும்.

**சிம்மம்:** காரியங்கள் அனுகூலமாகும். செலவுகள் ஏற்பட்டாலும், அதனால் மகிழ்ச்சியே உண்டாகும். உறவினர்களால் வீட்டில் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்படக் கூடும்.

**கன்னி:** சோர்வு நீங்கி உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும், அவர்களை அரவணைத்துச் செல்வது அவசியம். சில பிரச்சினைகள் உருவாகலாம்.

**துலாம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் பேசும்போது பொறுமை அவசியம். காரியம் தாமதம் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** உறவுகளால் நன்மை ஏற்படும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டு. குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு மிகுந்த முக்கியத்துவம் கிடைக்கும்.

**தனுசு:** உற்சாகமான நாள். மனஉறுதியுடன் செயற்படுவீர்கள். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். சகோதரர்கள் உங்களுடைய யோசனையை ஏற்றுக்கொள்வார்கள்.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். செலவு செய்யவேண்டி வரும். சிலருக்கு உறவினர்களால் சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**கும்பம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாள். பிள்ளைகளால் வீட்டில் உற்சாகமும் கலகலப்புமான சூழ்நிலை காணப்படும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**மீனம்:** எதிலும் நிதானமாகச் செயற்படவும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். வீண்விவாதம் ஏற்படக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## ஊடகமும் உரிமையும்!

சர்வதேச ஊடக சுதந்திரதினமான நேற்றையதினம் இலங்கையெங்கும் போராட்டங்கள், பேரணிகள், கண்டனக் கூட்டங்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. 'உரிமைகளுக்கான எதிர்காலத்தை வடிவமைத்தல், ஏனைய அனைத்து வகையான மனித உரிமைகளுக்கும் ஓர் இயக்கியாக கருத்துச் சுதந்திரம் பேணப்படுதல்' என்பதுதான் இந்த வருட ஊடகச் சுதந்திரதினத்துக்கான தொனிப்பொருள். இந்தத் தொனிப்பொருள் உலகில் எந்தநாட்டுக்குப் பொருந்துகின்றதோ இல்லையோ இலங்கைக்குக் கனகச்சிதமாகவே பொருந்துகின்றது. இன்னும் சொல்லப்போனால், இலங்கையைக் கருத்திற்கொண்டே இந்தத் தொனிப்பொருள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றதோ என்று எண்ணும் அளவுக்கு அது இலங்கையின் சமகால விவகாரங்களுடன் இரண்டறக்கலந்து நெருக்கமுறுகின்றது.

இலங்கையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்குப் பதிலாகக் கொண்டுவரப்படும் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமானது குறைந்தபட்ச மனித உரிமைகளையும் கருத்துச் சுதந்திரத்தையும் இல்லாது செய்கின்ற ஆபத்தான அம்சங்களைக் கொண்டமைந்துள்ளது என்பது சட்டவல்லுநர்களின் குற்றச்சாட்டாக அமைந்திருக்கின்றது. அரசாங்கத்துக்கு எதிரான சாதாரண போராட்டங்கள், தொழிற்சங்க நடவடிக்கைகள்கூட பயங்கரவாதம் என்ற சித்தாந்தத்தின் கீழ் நோக்கப்படுவதற்கு இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டம் இடமளிக்கின்றது என்றும் இதனால் அந்தச் சட்டம் கொண்டுவரப்படக்கூடாது என்றும் வலியுறுத்தி நாடளாவிய ரீதியில் போராட்டங்கள் அனுதினம் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அத்துடன், ஊடகங்களுக்கு எதிரான கட்டுப்பாடுகள் மற்றும் கழுகுப்பார்வைகள் என்பனவும் ஐக்கிய தேசியக் கட்சியைத் தலையாகவும் பெரமுனவை உடலாகவும் கொண்ட இந்த அரசாங்கத்தில் தொடர்ந்தே வருகின்றன. இவ்வாறானதொரு பின்னணியில், உரிமைகளுக்கான எதிர்காலத்தையும் கருத்துச் சுதந்திரத்தையும் மையப்படுத்திய இந்தத் தொனிப்பொருள் இலங்கை அரசாங்கத்துக்குப் பல்வேறுபட்ட தகவல்களை – வலியுறுத்தல்களை வழங்கி நிற்கின்றது என்பதே உண்மை.

இலங்கை அரசாங்கத்துக்கும் ஊடக சுதந்திரத்துக்கும் இடையில் எப்போதும் எட்டாப்பொருத்தமே. போர்க் காலத்திலும் சரி, அதற்குப் பின்னரான காலத்திலும் சரி இலங்கையில் ஊடகப் படுகொலைகளுக்கும் அடக்குமுறைகளுக்கும் பஞ்சமேயிருந்ததில்லை. விரல்விட்டு எண்ணமுடியாத அளவுக்கு இந்தப் பட்டியல் மிக நீட்சியானது. எனினும் பாதிக்கப்பட்ட தரப்புகளுக்கு அரசாங்கம் எத்தகைய நீதியைப் பெற்றுக் கொடுத்திருக்கின்றது ? என்று கேட்டால் அதற்குரிய பதில்தான் ஊடகங்களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான 'உறவைப்' பறைசாற்றும். ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான பல விசாரணைகள் பூர்வாங்கச் செயற்பாடுகளுடன் மட்டுப்படுத்தப்பட்டுவிட்டன. இலங்கையில் ஊடக சுதந்திரத்தை வலியுறுத்திப் பலரும் குரல்கொடுக்கின்ற போதிலும் இந்த விடயத்தில் இம்மியளவு முன்னேற்றம்கூட இல்லை. இதில் ஆகப்பெரும் துயர்கதை உதயனுடையது.


2006 ஆம் ஆண்டு மே மாதம் 2 ஆம் திகதி அதாவது ஊடக சுதந்திரதினத்துக்கு முதல் நாள் உதயன் அலுவலகத்துக்குள் அத்துமீறி நுழைந்த காடையர் குழு நடத்திய வெறியாட்டத்தில் இரண்டு ஊடகப் பணியாளர்களின் உயிர்கள் காவு வாங்கப்பட்டன. அவர்கள் உட்பட மொத்தம் 7 பணியாளர்களை உதயன் பல்வேறுபட்ட தாக்குதல்களில் இழந்திருக்கின்றான். பல பணியாளர்கள் காயமடைந்திருக்கின்றனர். சுமார் 40 தடவைகள் உதயன் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றான். ஆனால், இதில் எதற்கும் நீதியென்பது இன்னமும் கிட்டியபாடில்லை. எனினும், தடையைக் கண்டால் வெள்ளம் வீறுகொண்டு பாய்வது போன்று இந்தத் தடைகள் உதயனின் வீச்சை – பாய்ச்சலை அதிகரித்ததே அன்றி அதை இம்மியும் குறைத்துவிடவில்லை. உதயனின் எழுச்சியில் எதிர்மறைத் தாக்கம் செலுத்தவில்லை என்பதெல்லாம் வேறுகதை.

எந்தவொரு நாடு ஊடக சுதந்திரத்தில் முன்னணியில் நிற்கின்றதோ அந்த நாடுதான் ஜனநாயக அம்சங்கள் பொருந்திய தேசமாக அடையாளப்படுத்தப்படும். மக்களாட்சித் தத்துவத்தின் மகோன்னதமும் அதுவேதான். ஆனால், ஊடக சுதந்திரத்தில், கடைவரிசையில் நின்றுகொண்டிருக்கும் இலங்கையிடம், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை விட பரிசாக எதைத்தான் நாம் எதிர்பார்க்க முடியும்?

நாளொரு நல்வார்த்தை

"அறிவைத் தேடி ஓடுங்கள். நாளைய வரலாறு உங்கள் நிழலாகத் தேடி ஓடி வரும்"

– அம்பேத்கர்




# சீன ஆதிக்கத்தை ஒழிக்க 13ஆம் திருத்தம் தேவை!

## விக்னேஸ்வரன் வலியுறுத்து

**யாழ்ப்பாணம், மே 4**

**வடக்கில் சீன ஆதிக்கம் முற்றாக ஒழிய வேண்டுமாயின் 13ஆவது திருத்தம் முற்றாக நடைமுறைப்படுத்தப்பட்டு மாகாண ஆட்சி ஏற்படுத்தப்படவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவருமான சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.**

யாழ்ப்பாணத்தில் உள்ள அவருடைய அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில் சீனாவின் நடவடிக்கைகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. அவர்கள் தங்களுக்குத் தேவையான, தங்களுடைய நாட்டுக்குத் தேவையான விடயங்களுக்காக எவ்வளவும் இறங்குவார்கள். இலங்கை அரசாங்கமோ சீனாவுடன் இணைவது போன்றும், இந்தியாவுடன் இணைவது போன்றும் மாறிமாறிச் செயற்பட்டு வருகின்றது. இதுவொரு ஆபத்தான விளையாட்டு. கடைசியில் இந்த நாடுகள் அனைத்தும் இணைந்து இலங்கைக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டி ஏற்படும்.

13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது. ஐக்கிய நாடுகள்சபையில் வைத்தும் இந்தியா இந்தக் கோரிக்கையை முன்வைத்தது. ஆனால் அது செயற்படுத்தப்படவில்லை. இந்தத் திருத்தத்தை நடைமுறைப்படுத்தினால் சீனாவின் ஆதிக்கத்தை வடக்கில் குறைக்கலாம். அதாவது முதலமைச்சராக வருபவர் சீன ஆதிக்கத்துக்கு எதிரானவராயின் அவர் சீனாவின் பிடியிலிருந்து வடக்கை விடுவிக்கமுடியும். 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு இந்தியா தொடர்ந்து வலியுறுத்துவதை நாம் வரவேற்கின்றோம். இது தொடர்பில் இந்தியப் பிரதமர் மோடியைச் சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டால் நாம் சந்திக்கவும் தயார் - என்றார். (ம-125)

# தமிழ் அரசின் தலைமைக்கு மூன்று பேர் குறிவைப்பாம்

யாழ்ப்பாணம், மே 4

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் அடுத்த தலைவர் யார் என்ற கேள்வி எழுந்துள்ள நிலையில், தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன் மற்றும் சிறீதரன் ஆகியோர் அந்தப் பதவிக்கு குறி வைத்துள்ளதாகவும், அவர்களோடு வடக்கு மாகாணசபையின் அவைத் தலைவர் சீ.வி. கே.சிவஞானமும் தலைமைப் பதவிக்கு குறி வைத்துள்ளதாக தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான மாவை.சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

(ஒ-இ)

நாளை

05.05.2023
வெள்ளிக்கிழமை
சித்திரை 22

சுபநேரம் : 05.56- 07.26
ராகுகாலம் : 10.26 – 11.56

வைசாக்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைமடுவின் கீழ் சிறுபோகம் காணிகளை ஒதுக்கித் தாருங்கள்

## விவசாயிகள் கோரிக்கை

**கிளிநொச்சி, மே. 4**

**கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோகச்செய்கைக்கு உள்வாங்கப்படாத பிரதேசங்களில் வசிக்கும் விவசாயிகளுக்கு, அவர்களுக்குரிய விவசாய நடவடிக்கைகளுக்கான பதில் காணிகள், சிறுபோகபயிர்ச்செய்கை அனுமதிக்கப்பட்ட பகுதிகளிலும் இதுவரை வழங்கப்படவில்லை என சுட்டிக்காட்டப்படுகிறது.**

சிறுபோகச்செய்கை பதிவுகளுக்கான இறுதித் திகதி நிறைவடைந்த போதும் இதுவரை 225 விவசாயிகளுக்கு சிறுபோகச்செய்கைக்கான காணி பகிர்ந்தளிக்கப்படவில்லை.

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின்கீழ் இந்த ஆண்டு 13 ஆயிரத்து 500 ஏக்கர் சிறுபோகச் செய்கைக்கெனத் தீர்மானிக்கப்பட்டு அதற்கான திகதிகள் அறிவிக்கப்பட்டு பயிர்ச்செய்கை முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எனினும் சிறுபோகச்செய்கைக்கு உள்வாங்கப்படாத பிரதேசங்களிலுள்ள விவசாயிகளுக்கு சிறுபோகச்செய்கைக்கு அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் இதுவரை பயிர்ச்செய்கைக்கான காணிகள் வழங்கப்படவில்லை.

அவ்வாறான விவசாயிகளிடமிருந்து நிலக்குத்தகையைக் கோருதல், நீர்ப் பங்குகளைக் கோருதல் போன்ற செயற்பாடுகளால் காணி வழங்கல் இழுத்தடிச் செய்யப்படுகின்றது என்று பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

98.25 ஏக்கர் காணிகள் இதுவரை பகிர்ந்தளிக்கப்படாத நிலையில் அந்தக் காணிகளை தமக்கு அதிகாரிகள் விரைந்து பெற்றுத் தரவேண்டும் என்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-113)

## வடக்கில் ஒரேநாளில்

# 1,600 முன்பள்ளிகளில் சத்துணவுத் திட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 4

வடக்கு மாகாணத்திலுள்ள சுமார் ஆயிரத்து 600 முன்பள்ளிகளுக்கு இலவச சத்துணவுத் திட்டம் ஒரேநாளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மூன்று மாத காலத்துக்கு உலக வங்கி அனுசரணையில் இந்தச் சத்துணவுத் திட்டம் இடம்பெறவுள்ளது.

வடக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகம் உள்ளூராட்சி அமைச்சு, வடக்கு மாகாண கல்வி அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சு ஆகியன இணைந்து இந்தச் செயற்றிட்டத்தை வழி நடத்துகின்றன.

முன்பள்ளி மாணவர்களின் உடல் ஆரோக்கியத்தைப் பேண சத்தான உணவை வழங்கும் நோக்குடன் இந்தத் திட்டம் செயற்படுத்தப்படுகிறது.

இதற்கான செயற்றிட்டம், யாழ்ப்பாணம் பகுதியில் அமைந்துள்ள முன்பள்ளி ஒன்றில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் தவிர்க்க முடியாத காரணத்தால் வட மாகாண பிரதமசெயலாளர் பங்கேற்கவில்லை. பிரதமசெயலாளர் அலுவலகப் பிரதிநிதி, நல்லூர் பிரதேசசபையின் செயலாளர், நல்லூர் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி, வடமாகாண ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் நிகழ்வில் கலந்துகொண்டனர். (ச)



# டெங்குப் பரவலைத்தடுக்க சுற்றுச்சூழலைப் பேணுங்கள்

### யாழ். மாவட்ட பிராந்திய சேவைகள் பணிப்பாளர் வேண்டுகோள்

இந்த வருடத்தின் இதுவரையான நான்கு மாத காலப்பகுதியில் யாழ்.மாவட்டத்தில் ஆயிரத்து 132 பேர் டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். ஓர் இறப்பும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மழைகாலம் ஆரம்பிப்பதன் காரணமாக டெங்கு நோய்த் தாக்கத்திலிருந்து பாதுகாத்துக்கொள்ள மக்கள் சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்திருக்கவேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கேட்டுக்கொண்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்;

யாழ்.மாவட்டத்தில் கடந்த வருடத்தை விட இந்த வருடம் டெங்கு நோய்த் தாக்கம் குறைவாகவே காணப்படுகிறது.

இந்த வருடத்தில் இது வரையான காலப் பகுதியில் ஆயிரத்து 132 பேர் யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஓர் இறப்பும் ஏற்பட்டுள்ளது. அவர் யாழ். மாவட்டத்தை சொந்த இடமாகக் கொண்டவர் அல்லர்.

தற்போது மழை நீடிக்கின்றது. இதனால் டெங்கு பரவல் அதிகரிக்கும் வாய்ப்புகள் அதிகம். எனவே பொதுமக்கள் தங்கள் வீடுகள், வேலைத்தளங்கள், பாடசாலைகள் போன்ற பொது இடங்களில் நுளம்பு பெருகாதவாறு சுத்தமாக வைத்திருப்பதுடன் டெங்கு நோயை கட்டுப்படுத்த ஒத்துழைப்பு வழங்கவேண்டும் - என்றார். (ச-26)

# உதவிக் கொடுப்பனவு மோசடிகள் அதிகரிப்பு

### மக்கள் அவதானம்!


சாவகச்சேரி, மே 4

அரசாங்கத்தால் வழங்கப்படவுள்ள நலன்புரி உதவித் திட்டத்தை பெற்றுத் தருவதாகக் கூறி பொதுமக்களிடம் மோசடியில் ஈடுபடும் கும்பல் குறித்து அவதானமாக இருக்குமாறு தென்மராட்சிப் பிரதேசசெயலகம் அறிவுறுத்தியுள்ளது.

தம்மை பிரதேசசெயலக உத்தியோகத்தரென அடையாளப்படுத்தி வீட்டினுள் நுழைந்து, உங்களுக்கு நலன்புரி உதவித் திட்டங்கள் கிடைக்கவுள்ளன. இதற்கென உங்களை உள்ளீர்த்துக்கொள்ள குறித்த தொகை செலுத்துங்கள் என மோசடி நடவடிக்கைகளில் பலர் ஈடுபட்டுள்ளனர். இதனை நம்பி பெருமளவு பணத்தைக் கொடுத்து ஏமாறும் சம்பவங்கள் பதிவாகின்றன.

தற்போது நலன்புரி உதவிப் படிவங்கள் உரிய திணைக்களத்துக்கு அனுப்பும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. முடிவுகள் கொழும்பில் தீர்மானிக்கப்படும்.

ஏமாற்று நடவடிக்கைகளை மேற்கொள்வோர் வீடுகளுக்கு வந்தால் அந்தந்தப் பிரிவு கிராம அலுவலருக்கு அல்லது அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்குங்கள் என தென்மராட்சிப் பிரதேசசெயலகம் பொதுமக்களுக்கு எச்சரித்துள்ளது. (ச-9)



இந்தியாவிலிருந்து வருகைதந்த சுதேசி பனை ஆராய்ச்சி நிறுவனப் பணிப்பாளர் தலைமையிலான குழுவினர், யாழ்ப்பாணம் கைதடியில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச் சபையினுடைய பனை ஆராய்ச்சி நிறுவனத்துக்கு நேற்றுமுன் தினம் சென்று பனைசார் உற்பத்திப் பொருள்கள் தொடர்பில் பார்வையிட்டனர். (ச)

# 1 லட்சம் குடும்பங்களுக்கு விரைவில் அரச காணிகள்!

### பணிகள் இறுதிக்கட்டமென வடக்கு ஆளுநர் தகவல்

யாழ்ப்பாணம், மே 4

வடக்கு மாகாணத்தில் காணியற்ற - பொருளாதாரம் நலிவுற்ற சுமார் ஒரு லட்சத்து 18 ஆயிரம் குடும்பங்களுக்கு விரைவில் காணிகள் வழங்கப்படும். அதன் பணிகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன என வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கில் காணியற்ற குடும்பங்களுக்கான நன்கொடைக் காணிகள் வழங்கும் செயற்பாடுகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன.

அதேபோன்று காணியற்ற அரச அலுவலர்களுக்கும் குத்தகைக்கு மற்றும் வீடுகளைக் கட்டுவதற்கு காணிகள் வழங்கும் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

மாகாணத்தில் சுமார் 4 லட்சம் மரங்கள் ஒவ்வொன்றுக்கும் 1:5 என்ற விகிதத்தில் மரங்களை நடுவதற்கும் புதிய நீர்த்தேக்கங்களை உருவாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வழங்கப்படும் காணித் துண்டுகளில் நடுகை செய்யும் பயன்தரும் மரங்களுக்கான இலவச ஆலோசனைகளும் பெற்றுக் கொடுக்கப்படும்.

இந்தத் திட்டத்தை செயற்படுத்துவதற்காக மாகாண அமைச்சுக்களின் அதிகாரிகள், உள்ளூராட்சி மன்றங்களின் உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச குழுக்கள் இணைந்து பணியாற்றுவதற்கான செயற்றிட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன - என்றார். (ச)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தெரிவுசெய்யப்பட்ட 50 பேருக்கு

# இலவச கண்புரை சத்திரசிகிச்சை செவ்வாயன்று யாழ்.போதனாவில்

யாழ்ப்பாணம், மே 4

யாழ்.மாவட்டத்தில் கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுடைய நோயாளிகளுக்கான இலவச கண்புரை சத்திரசிகிச்சை முகாம் யாழ். போதனா மருத்துவமனையில் எதிர்வரும் 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த முகாமில் வேலணைப் பிரதேசத்திலிருந்து சத்திரசிகிச்சைக்காகத் தெரிவுசெய்யப்பட்ட 50 பேருக்கு கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படும்.

தெரிவுசெய்யப்பட்ட நோயாளர்கள் எதிர்வரும் 8ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வேலணை பிரதேச மருத்துவமனைக்கு சமுகமளிக்க வேண்டும். அங்கிருந்து அவர்களை யாழ். போதனா மருத்துவமனைக்கு அழைத்து வரவும் பின்னர் மீள வேலணை பிரதேச மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லவும் இலவச போக்குவரத்து வசதிகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

தெரிவுசெய்யப்பட்ட நோயாளர்களுக்கு சுகாதாரத் திணைக்களத்தால் தொலைபேசி மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. உரிய நேரத்துக்கு சமுகமளித்து ஒத்துழைப்பு வழங்குங்கள் என யாழ்.மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் அறிவுறுத்தியுள்ளார். (ச)

# பரிசோதனைகளுக்கு அதிகரித்த கட்டணம்!

## ஆய்வகங்களுக்குத் தண்டம்

கொழும்பு, மே 4

குருதிப் பரிசோதனை மற்றும் டெங்குப் பரிசோதனை ஆகியவற்றுக்கு அதிக கட்டணம் வசூலித்த 12 மருத்துவமனைகள் மற்றும் ஆய்வகங்களுக்கு எதிராக பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டநடவடிக்கை எடுத்துள்ளது.

விதிமுறைகளை மீறியமை, பரிசோதனைகளுக்கு வர்த்தமானி விலைக்கு மேல் கட்டணம் வசூலித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை வழக்குப் பதிவு செய்தது.

அதற்கமைய விதிமுறைகளை மீறியோருக்கு நீதிமன்று சுமார் 9.4 மில்லியன் ரூபா தண்டம் விதித்துள்ளது.

அனைத்து ஆய்வக சோதனைகளுக்கும் தரப்படுத்தப்பட்ட விலைகளை காட்சிப்படுத்தவேண்டும் என்றும் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை அறிவுறுத்தியுள்ளது. (ச-இ)

வவுனியா பேருந்து நிலையத்தில்

# இரு பெண்கள் மோதல்;ஒருவருக்குக் காயம்!

## பொலிஸார் விசாரணை

வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் இரு பெண்கள் கைகலப்பில் ஈடுபட்டமை தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

வவுனியா, பழைய பேருந்து நிலையத்தில் நடமாடித் திரிகின்ற இந்த இரு பெண்கள், விடுமுறையில் செல்லும் சிப்பாயை அழைத்துச் செல்வது தொடர்பில் தமக்குள் மோதிக்கொண்டுள்ளனர். இதனால் ஒருவர் காயமடைந்துள்ள நிலையில், அவர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்துள்ளார். இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை நடத்திவருகின்றனர். (ம-18)




**கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்**
**கொக்குவில்**
**(புதுக்கோவில்)**

பதிவு இல. S 149/30.11.1962
HA/5/JA/226

கே.கே.எஸ். வீதி,
கொக்குவில்.

**விசேட அறிவித்தல்**

02.05.2023ம் திகதி உதயன் பத்திரிகையில் வே.பஞ்சலிங்கம் என்பவரால் கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய கோவில் (புதுக்கோவில்) தொடர்பில் நிர்வாக சபை தெரிவும், பரம்பரை குருக்கள் குடும்பத்தை பூசைக்கு அமர்த்தும் விடயம் தொடர்பிலும் விசேட பொதுக்கூட்டம் ஒன்று எதிர்வரும் 08.05. 2023 திங்கட்கிழமை பி.ப 5.00 மணிக்கு நடைபெறும் என பொதுச்சபை உறுப்பினர்களுக்கு அறியத் தருவ்தாக ஒரு விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

மேற்படியான ஒரு கூட்டம் ஒன்றை நிர்வாக சபையின் அனுமதியின்றி கூட்டுவதற்கு குறித்த அறிவித்தலினை வழங்கியுள்ள வே.பஞ்சலிங்கம் என்பவருக்கு எந்தவித உரித்தும் இல்லை என்றும், குறித்த வே.பஞ்சலிங்கம் ஏற்கனவே 01.04.2023 நடைபெற்ற நிர்வாகசபைக் கூட்டத்தில் நிர்வாக சபையின் பதவியிலிருந்து ஏகமனதாக சபை அங்கத்தவர்களால் தீர்மானிக்கப்பட்டு தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் என்றும், ஆகையால் அவருக்கு கூட்டம் எதனையும் நடாத்துவதற்கு எந்த உரிமையும் இல்லை என்பதை சகல பொதுச்சபை உறுப்பினர்களுக்கும் அறியத்தருகிறோம்.

இ.கிருசாந்தன்
தலைவர்

(CS 24773)A-1

ந.ஸ்ரீரஞ்சன்
செயலாளர்



**தசாக கிருஹயக்ஞ அழைப்பு**



சோபகிருது வருடம் சித்திரை திங்கள்
**10 ஆம் நாள் (23.04. 2023)**
**ஞாயிற்றுக்கிழமை**
வளர்பிறை சதுர்த்தி திதியில் இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரும், யா/ கைதடி முத்துக்குமாரசுவாமி பாடசாலை ஸ்தாபகர் வழித்தோன்றலும், இணுங்கித் தோட்டம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய ஸ்தானிக குருவும், கைதடி வாலாம்பிகை அம்மன் கோவில் மற்றும் மூர்த்தியாவத்தை ஸ்ரீ கந்தசுவாமி கோவில் பிரதம குருவுமாகிய

**அமரர் சிவஸ்ரீ யோகானந்த ஈஸ்வரக்குருக்கள் குருசாமிக்குருக்கள்**

அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்

- 02.05.2023 - செவ்வாய்க்கிழமை - தசாகம் காலை 10.00 மணி
- 03.05.2023 - புதன்கிழமை - இடபம் ஏகாதிஷ்டம் (மாசிகம்)
- 04.05.2023 - வியாழக்கிழமை - சபிண்டீகரணம்
- 05.05.2023 - வெள்ளிக்கிழமை - கிருஹயக்ஞம் சமாராதனை

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை **07.05.2023** **ஞாயிற்றுக்கிழமை** நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

கைதடி
077 610 5788

(cs 24693) (N-1))

**குடும்பத்தினர்.**



THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

**VACANCY ANOUNCEMENT FOR TEMPORARY TRANSLATORS – 5 Positions**

**About Us**

The HALO Trust is the world's largest and oldest international humanitarian mine action non-government organization (NGO). For over thirty years, we have been saving lives and helping war-torn communities recover, by making their land safe. Our mission is to protect lives and restore the livelihoods of those affected by conflict.

HALO is known for its work to clear landmines, but we also lead on dealing with unexploded ordnance, from bullets to aircraft bombs, and we educate communities to keep them safe. We also build safe arms stores and systems for securing guns. HALO was established in Afghanistan in 1988 and now employs over 9,500 staff in 28 countries and territories.

HALO has been working in Sri Lanka since 2002 and now has over 1,300 staff working in the Northern Province with offices in Jaffna, Kilinochchi and Mullaitivu. To date, HALO has safely destroyed over one million items of explosive ordnance, including more than 270,000 anti-personnel landmines. The explosive ordnance contamination is a result of over three decades of civil war that ended in 2009. HALO and other mine action stakeholders are working to clear Sri Lanka of all known contamination by 2028 to meet Sri Lanka's obligations as a state party to the Anti-Personnel Mine Ban Convention.

**Job Overview**

We are looking to recruit 5 Translators for the duration of the Field Officer course from June to September 2023. The translators will support a cohort of international HALO staff for the duration of their training course. This will mostly require oral translation support (English-Tamil) during the trainees' deployment to HALQ's minefields. We are hoping to attract students from Jaffna university who are interested in signing a three-month contract with us.

This is a short-term, temporary contract from 01 June to approximately 19 September 2023.

**Requirements for this position**

- Fluency in Tamil and English, to provide oral translation support.
- Translators must be comfortable working outdoors, waking up early and walking around in the minefields.
- Translators must be able to get to the main office in Kilinochchi by themselves. Transportation to the field locations will be provided by HALO.
- Translators must be willing to stay overnight at HALO's base in Kokkuthoduvai.
- Translators must be available to start from the last week of May to receive a one-week induction to familiarize themselves with technical mine action terminology and to receive a full safety brief.
- Working hours are based on the training schedule and may include working on weekends.
- Translators will receive a monthly salary of 60,000 Rs.

Interested candidates must submit their CV on or before 10 May 2023 with their name and contact details to the address below or via email. Female candidates are encouraged to apply.

**HR Manager**
The HALO Trust,
450 Thirunagar West, Kilinochchi.
hr@halosrilanka.org

(cr.35498)(2.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ்.ஓ.எஸ் சிறுவர் காப்பகத்தின் ஸ்தாபகர் மருத்துவர் ஜேர்மன் மைனரின் ஞாபகார்த்த தினமாக கடந்த 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ் போதனா மருத்துவமனை குருதி வங்கிக்கு குருதிக்கொடை வழங்கப்பட்டது.
(ய-101)



யாழ். மல்லாகம் மகா வித்தியாலயத்தில் புதிதாக இணைந்த தரம்-6 மாணவர்களுக்கான கால்கோள் விழா கடந்த 27ஆம் திகதி வியாழக்கிழமை மேற்படி பாடசாலையின் மண்டபத்தில் இடம்பெற்றது.
நிகழ்வில் புதிதாக இணைந்த அனைத்து மாணவர்களுக்கு பழைய மாணவன் இளையதம்பி விக்னேஸ்வரனின் நிதிப் பங்களிப்பில் பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.
(ய-66)



யாழ்ப்பாணம் - நல்லூர் வடக்கு சட்டநாதர் வீதி, கொன்றையடி திருவருள் மிகு வைரவப்பெருமான் தேவஸ்தான வருடாந்த தேர் உற்சவத்தில் ஸ்ரீஸ்கந்தபதி கலாமன்ற மாணவர்களின் இசை ஆராதனை நிகழ்வு ஸ்ரீஸ்கந்தபதி கலாமன்றப் பணிப்பாளர் கலாவித்தகர் மா. அனந்தலெச்சுமி தலைமையில் கடந்த 20ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்றது.
(ய)


## வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி.

# கூறுவிலை கோரல்

வலி. கிழக்கு தென்பகுதி பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தின் உரும்பிராய் உபமொத்த நிலையத்தின் மேல் தளத்திற்கு தூண் போட்டு கூரை போடுவதற்கான கூலி மூலப்பொருட்களிற்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன. கூறுவிலை படிவங்களை சங்க தலைமையத்தில் பெற்று பூரணப்படுத்தி **"பொது முகாமையாளர், வலி. கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம் நீர்வேலி"** என்ற முகவரிக்கு தபால் மூலமோ நேரிலோ அனுப்பிவைக்கவும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 19.05.2023**
**மதியம் 12.30 மணிவரை**

**நீர்வேலி**
**02.05.2023**
**பொது முகாமையாளர்.**

(ச.39775) (N-1)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

# துணைவேந்தர் பதவி

1. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பேரவை 1978 ஆம் ஆண்டைய 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 34ஆம் பிரிவு மற்றும் அதன் பின் வந்த திருத்தங்களின் பேரில் செயற்படுமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பங்களைக் கோரி அழைப்பு விடுக்கின்றது. பதவிக்கான தெரிவு 03/ 2023 இலக்க 10.04.2023 திகதிய சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள முறையில் இடம்பெறும் என விண்ணப்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ளவர்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன். விபரங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வலைத்தளத்தின் https://www.ugc.ac.lk/attachments/2442 Commission%20Circular%20No.%2003-2023.pdf இணைப்பிலிருந்து பெற்றுக்கொள்ள லாம். பதவிக்கு நியமனம் செய்யப்படும் விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாகவும் 63 வயதிற்குட்பட்டவராகவும் இருக்க வேண்டும். பதவிக்கு நியமனம் செய்யப்படும் விண்ணப்பதாரி நியமனம் பெற்ற தினத்திலிருந்து மூன்று வருடங்களுக்கு அல்லது அவர் தனது 65 வயதைப் பூர்த்தி செய்யும் நாள் இவ்விரண்டில் எது முன்வருகின்றதோ அது வரை பதவி வகிப்பார்.

   கற்பித்தல், கற்றல், ஆராய்ச்சி, புலமைத்துவம் என்பவற்றுக்கான உன்னத நிலையங்களுள் தலையாயதாக விளங்குவதே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர்நோக்காகும். உயர்கல்வியின் தரநிலையை உயர்த்துவதும் பொதுவாக நாட்டினதும் குறிப்பாக வடமாகாணத்தினதும் அபிவிருத்திக்கு பொருந்திவரக் கூடிய ஆராய்ச்சியை ஊக்குவிப்பதும் அதன் முன்னுரிமைகளாம். இப்பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்தில் எட்டு பீடங்களையும் கிளிநொச்சியில் மூன்று பீடங்களையும் (எல்லாமாக 11 பீடங்களை) கொண்டமைந்து ஏறத்தாழ பன்னிரண்டாயிரத்து ஐந்நூறு பட்டதாரி மாணவர்களையும் அறுநூறு உயர் பட்டதாரி மாணவர்களையும் கொண்ட தொகையினருக்கு தொழில்சார் மற்றும் சான்றங்கீகாரமளிக்கப்பட்ட பட்டப்படிப்பு நெறிகளை வழங்கி வருகிறது. துணைவேந்தர் இந்நடவடிக்கைகளுக்கு வலுவூட்டித் துணை புரியமாறு எதிர் பார்க்கப்படுகிறார்.

2. துணைவேந்தர் தனது அறிவுசார் வாண்மை மற்றும் மேலாண்மை என்பவற்றின் பிரகாசிப்பினூடாக பல்கலைக்கழத்தின் உயர்நோக்கு மற்றும் அதன் இலக்குகளை முன்னெடுத்து செல்வதற்கு ஏற்ற வகையில் ஒரு உயர் நோக்கு உடையவராக இருத்தல் வேண்டும். மேலும், துணைவேந்தர் உயர்கல்விக்கான தேசியக் கொள்கைகள் தொடர்பில் தேசத்தின் தேவைகளை இனங் காண்பதற்கு அழைப்பு விடுக்கப்படுபவராகவும் உள்ளார். அவர் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு உள்ளடங்கலாக அவரது தலைமைத்துவம் மற்றும் கல்விசார் நடவடிக்கைகளினூடாக பல்கலைக்கழகத்தை முன்னேற்றுவதற்காகக் காலத்தால் பரீட்சிக்கப்பட்ட விழுமியங்களைப் பலப்படுத்த வல்லவராகவும் இருத்தல் வேண்டும். எனவே விண்ணப்பதாரி கல்வியில் மீயுயர் நிலையும், நாணயமும் வலிமையான ஆராய்ச்சிப் பின்புலத்தோடு கூடிய தலைசிறந்த சாதனைகளுக்கு உரித்துடையவராகவும், பலதிறப்பட்ட ஆர்வக் குழுக்களுடன் அறிவார்ந்த நிலையில் தொடர்புறுவதற்காக நிரூபிக்கப்பட்ட தலைமைத்துவ பண்புகளையும் ஆட்தொடர்பாடல் திறன்களையும் கொண்டவராகவும், கொள்கை விடயங்களில் ஒரு தெளிவான புரிதல் உடையவராகவும், மாணவர் மற்றும் ஊழியர் ஆகியோரின் பல்திறப்பட்ட ஈடுபாட்டைத் தூண்டக்கூடிய வல்லமையுடன் கூடிய உன்னதமான தொடர்பாடற்திறன்களையும் தீர்மானங்களைத் திறம்பட நடைமுறைப்படுத்துவதில் பற்றுறுதியும் கொண்டவராகவும் விளங்குமாறு எதிர்பார்க்கப்படுகிறார்.

   துணைவேந்தர் முழுநேர உத்தியோகத்தர் என்பதோடு அவரே பிரதம நிறைவேற்று அதிகாரியும், பிரதம கல்விசார் அதிகாரியும் ஆவார். துணைவேந்தரே பிரதம கணக்கீட்டு அதிகாரியும் ஆவார். பல்கலைக்கழகப் பேரவை மற்றும் மூதவை என்பவற்றின் பதவி வழி உறுப்பினரும் தலைவரும் அவரே ஆவார். பல்கலைக்கழகத்துள் ஒழுக்கத்தை பேணும் பொறுப்பு அவருக்குரியது. பல்கலைக்கழகத்தின் சட்டமும் அதன் எந்தவொரு பொருத்தமான கருவியும் விதித்துரைத்தவைகள் முறையாகப் பேணப்படுவதனை உறுதி செய்தல் துணைவேந்தரின் கடமை என்பதனால் அந்த நோக்கத்திற்காக அவர் அவசியம் என்று கருதத்தக்க எல்லா அதிகாரங்களையும் பயன்படுத்துதல் வேண்டும்.

   துணைவேந்தர் கல்விக்கான தலைமைத்துவத்தை வழங்கல், ஆற்றொழுக்கான வகையில் அமையுமாறு மேலாண்மைக்கான கொள்கைகளை உருவாக்குதல், அறிமுகப்படுத்தல், நடைமுறைப்படுத்தல் என்பவற்றோடு பேரவைத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல், பல்கலைக்கழகத்தின் பொது நிர்வாகம் என்பவற்றுக்குப் பொறுப்பானவர் என்பதனால் கல்வியில் உன்னதம், நல்லாட்சி ஆகிய கோட்பாடுகளை உயர்த்திப் பிடிப்பவராக இருத்தல் வேண்டும். வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறும் தகைமை, ஜனநாயக மேலாண்மை மற்றும் சார்புநிலையற்ற திறமிகு தலைமைத்துவம் என்பவற்றையும் நிலைநிறுத்தும் பொறுப்பும் துணைவேந்தருக்குரியது.

   யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகும் விருப்புடையவர் கடினமானதும், நெருக்கடியானதும், சடுதியான நிலைமாறுதல்களை உடையதுமான சூழ்நிலைகளை தன் திறனாற்றல் மற்றும் சாதுர்யத்தின் மூலம் திறம்படக் கையாளக் கூடியவராக இருத்தல் வேண்டும். கைக் கொண்ட காரியத்தின் தன்மையைப் பொறுத்து நெடுமணி நேரம் பணியாற்றக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

   துணைவேந்தர் பல்கலைக்கழக முறைமையில் கல்விசார் சம்பள அளவுத்திட்டத்தில் அதியுயர் நிலையில் வைக்கப்படுவதற்கு உரித்துடையவர் என்பதோடு அதன்மேல் அச்சம்பளத்தின் 15% இனை உபசரிப்புப் படியாகப் பெறுவதற்கும் உரித்துடையவராவார்.

3. விண்ணப்பங்கள் கீழ்வரும் ஆவணங்களை இணைக்க வேண்டும்.
   1. பிறந்த திகதியையும் உள்ளடக்கிய ஒரு முழுமையான சுயதகைமை விபரப் பட்டியல்.
   2. விண்ணப்பதாரி பல்கலைக்கழக அபிவிருத்திக்கான உயர் நோக்குக்கான கூற்றுடன் அவர் நியமிக்கப்படும் பட்சத்தில் தான் அடைய முன்மொழிவன பற்றியதொரு சுருக்கமான விளக்கம்.
   3. தற்போது இப் பதவியை வகிப்பவர் அல்லது முன்னர் இப்பதவியை வகித்தவர் விண்ணப்பதாரி எனின் அவர் தான் தன்னுடைய முன்னைய பதவிக்காலத்தில் சாதித்தவை பற்றியும் எதிர் காலத்திற்கான திட்டங்கள் பற்றியும் கோடிட்டுக் காட்டும் வகையிலான அறிக்கையொன்றைக் கையளிக்க வேண்டும்.
   4. விண்ணப்பதாரி அரச பொதுத்துறை, கூட்டுத்தாபனங்கள், நியதிச்சபைகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தவிர்ந்த ஏனைய உயர்கல்வி நிறுவனங்கள் என்பவற்றில் யாதாவதொன்றில் சேவை புரிபவராயின் அவர் இப்பதவிக்கு நியமிக்கப்படுவாராயின் அவர் விடுவிக்கப்படமுடியுமா என்பதனை அறியத்தரும் பொருட்டு தொழில் கொள்வோரிடமிருந்து ஒரு கடிதம்.

விண்ணப்பங்கள் **"பேரவைச் செயலாளர், பதிவாளர் அலுவலகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்"** என முகவரியிட்டு மூடிய கடித உறையில் 02.06.2023 அன்று பி.ப 3.00 மணிக்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத்தபால் மூலமாக அனுப்பி வைக்கப்படவோ நேரடியாகக் கையளிக்கப்படவோ கூடும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'துணைவேந்தர் பதவி' எனக் குறித்திருக்க வேண்டும்.

மேலதிகமாக, மேலே உள்ள ஆவணங்கள் மற்றும் கையடக்க ஆவண வடிவமைப்பு (PDF) வடிவத்தில் உள்ள வேறு ஏதேனும் துணை ஆவணங்களின் மென்பிரதி எனது மின்னஞ்சல் முகவரி: registrar@univ.jfn.ac.lk இற்கு 02.06.2023 அன்று முடிவடைவதற்கு முன் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல. 03/2023 இல் பரிந்துரைக்கப்பட்டுள்ளபடி, விண்ணப்பங்கள் முடிவு திகதியிலிருந்து இரு மாதங்களுக்குள் மதிப்பீட்டிற்காக மற்றும் நேர்காணலுக்காக பேரவை செயலாளரினால் சிறப்பு பேரவைக் கூட்டம் வேலை நாள் ஒன்றில் கூட்டப்படும். ஒரு விதிவிலக்கான சூழ்நிலையில், எந்தவொரு விண்ணப்பதாரரும் சிறப்பு பேரவைக் கூட்டத்திற்கு நேரில் தோன்ற முடியாத நிலையில், செயலாளரிற்குத் தரும் முன்னறிவித்தல் மூலம் நிகழ்நிலையில் (virtual mode) தோன்ற அனுமதிக்கப்படுவார்.

ஒரு சுருக்கமான 10 நிமிடங்களுக்குக் குறையாததும் 15 நிமிடங்களுக்கு மேற்படாததுமான விளக்கக் காட்சியை நிகழ்த்துவதற்கு விண்ணப்பதாரர்கள் சிறப்பு பேரவைக் கூட்டத்திற்கு முன் அழைக்கப்படுவார்கள். ஆயினும் எந்தவொரு வேட்பாளரும் அவ்வேட்பாளர் பேரவை உறுப்பினராய் இருந்தாலும் கூட வேறொரு வேட்பாளரின் விளக்கக்காட்சியின் போது பங்குபற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

விசேட பேரவைக் கூட்டத்தின் அறிக்கையொன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை 03/2023 இன்படி மூன்று பெயர்களை விதந்துரைக்கும்படி தயார்செய்யப்பட்டு அனைத்து ஆவணங்களுடனும் இணைத்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு மேலதிக நடவடிக்கைகளுக்காக முன்வைக்கப்படும்.

மேற்படி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை எண். 03/2023 இன்படி எமது 27.01.2023 அன்று திகதியிடப்பட்ட முன்னைய விளம்பரமும் அதன் பின்னர் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் வலிதற்றதாக்கப்பட்டிருப்பதையும் துணைவேந்தர் நியமனத்திற்கான செயன்முறைகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மேற்கண்ட சுற்றறிக்கைக்கு அமைவாக புதிதாக தொடங்குகின்றன என்பதையும் அறியத்தருகின்றேன்.

முடிவு நாளுக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் கருத்திற்கொள்ளப்படா.

**விசுவநாதன் காண்டீபன்**
**பதிவாளரும் பேரவையின் செயலாளரும்**
**பதிவாளர் அலுவலகம்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**திருநெல்வேலி**
**02.05.2023**

(N.1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாவலி அதிகாரசபையால் மரபுவழிப் பகுதி ஆக்கிரமிப்பு

## வேடுவ தலைவரால் நீதிமன்றத்தில் வழக்கு

**கொழும்பு, மே 4**

**மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையால், தங்களது மரபு வழிப் பாரம்பரிய பிரதேசங்கள் அபகரிக்கப்பட்டு வருவதாக வேடுவ தலைவர் உருவருகே வன்னிலா அத்தோ மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.**

ரம்புக்கன் ஓயா பிரதேசத்தில் தங்களது மரபு வழிப் பாரம்பரிய பிரதேசங்கள் மகாவலி அபிவிருத்தி அதிகார சபையாலும், தனியார் நிறுவனங்களாலும் சோளப் பயிர்ச்செய்கைக்காக அபகரிக்கப்படுகின்றன என்றும் காடுகள் அழிக்கப்படுகின்றன என்றும் அவர் தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த மனு மீதான விசாரணைகள் செப்ரெம்பர் மாதம் 8ஆம் திகதி இடம்பெறவுள்ளன. (ம-6)

# புதுப்பிக்கத்தக்க வளத்தை அரசாங்கம் ஊக்கப்படுத்தும்

## எரிசக்தி அமைச்சர் தெரிவிப்பு

புதுப்பிக்கத்தக்க சக்தி வளத் திட்டங்களை (சூரிய சக்தி, காற்றாலை மின்) ஊக்குவிக்கும் முன்மொழிவுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என்று எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதுப்பிக்கத்தக்க சக்தி வளத் திட்டங்களுக்கான கட்டண அறவீடு குறித்த புதிய சூத்திரமொன்று அறிமுகம் செய்யப்படவுள்ளது.

முதன்மைக் கட்டணம், திறைசேரி பத்திரக் கட்டணம் மற்றும் பணவீக்கம் போன்ற காரணிகளை அடிப்படையாகக்கொண்டு இந்தச் சூத்திரம் உருவாக்கப்படவுள்ளது. மேலும் 20 ஆண்டுகளுக்கான திட்டமாக இது அமையப் பெறும் - என்றுள்ளது. (ம)

# அமெரிக்காவின் குற்றச்சாட்டுகள் புனையப்பட்ட கட்டுக்கதைகளே!

## வசந்த கரன்னகொட ஜூலி சங்குக்கு கடிதம்

கொழும்பு, மே 4

தன் மீதான அமெரிக்காவின் குற்றச்சாட்டு புனையப்பட்ட கட்டுக்கதைகள் என்று தெரிவித்துள்ளார். இலங்கையின் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட, இந்தக் குற்றச்சாட்டுக்களால் தனது உரிமைகள் மீது அமெரிக்கா நேரடியாகக் கைவைத்துள்ளது என்றும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்குக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

45 வருட குற்றமற்ற அரசசேவையின் மூலம் நான் ஏற்படுத்திக்கொண்ட கௌரவத்துக்கு நீங்கள் சுமத்தியுள்ள தவறான குற்றச்சாட்டுகள் கடும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. ஐ.சி.சி.ஆர்.பி.யின் 17ஆவது பிரிவின் கீழ் உங்கள் நடவடிக்கைகள் எனது உரிமை மீது நேரடியாகத் தலையிடுகின்றன.

இலங்கையின் சட்டங்களின் அடிப்படையில் எனது மனித உரிமைகள் மோசமாக மீறப்பட்டமை தொடர்பான சட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்து இதற்காக நியாயம் கேட்பேன்.

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்டென், எனக்கு எதிராகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து எனது கருத்தைக் கேட்கவில்லை - என்றுள்ளது. (ம-6)

# ஜனாதிபதிக்கு பலமாவோம்!

## வஜிர அபேவர்த்தன அழைப்பு

கொழும்பு, மே 4

நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்றால் குறுகிய கால முடிவுகளை எடுக்கமுடியாது. அதனால்தான் ரணில் விக்கிரமசிங்க, 'வெல்வோம் 2048' என்ற திட்டத்தை முன்வைத்தார். அந்தத் திட்டத்துக்கு நாம் அனைவரும் ஜனாதிபதிக்குப் பலமாக இருக்க வேண்டும். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

'2048 வெல்வோம்' என்ற தொனிப்பொருளின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட மேதினக் கொண்டாட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

ஐக்கிய தேசியக் கட்சி உழைக்கும் மக்களை போராட்டங்களுக்காக நசுக்கி வைக்கவில்லை. நல்ல வாழ்க்கை வாழக்கூடிய இடத்துக்குக் கொண்டுவர உழைக்கின்றது.

இன, மத பேதங்கள் அற்ற தலைவராக ரணில் விக்கிரமசிங்க விளங்குகிறார்.

நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்றால் நீண்ட கால அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் கொள்கைகளுடன் நாட்டை முன்நோக்கிக் கொண்டுசெல்ல வேண்டும்.

அதற்கமையவே ரணில் விக்கிரமசிங்க, 'வெல்வோம் 2048' என்ற திட்டத்தை முன்வைத்தார்.

அந்தத் திட்டத்துக்கு நாம் அனைவரும் ஜனாதிபதிக்குப் பலமாவோம். எதிர்காலத்தில் வளர்ந்த நாடுகளுடன் நாமும் இணைவோம் - என்றார். (ச-22)

# நாட்டின் 'சிஸ்டம் சேன்ஸ்' இலக்கை எட்டும் ரணில்!

## ருவான் விஜேவர்த்தன பாராட்டு

நாட்டில் 'சிஸ்டம் சேன்ஸ்' ஏற்படவேண்டும். சமூக மாற்றம் அவசியம். அதற்கென தூரநோக்கு சிந்தனை வழியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பயணித்து தடம்பதிக்கிறார். 2048 இல் நாடு அபிவிருத்தி இலக்கை எட்டுவதே அவர் நோக்கம்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரான ருவான் விஜேவர்த்தன ஐ.தே.க.கட்சியின் மேதினக் கொண்டாட்டத்தில் தெரிவித்தார்.

ஆட்சியைப் பிடிப்பதற்கும், தக்கவைத்துக்கொள்வதற்கும் ஏற்றவகையில் ஆட்சி செய்யும் எண்ணம் ரணில் விக்கிரமசிங்கவிடம் இல்லை.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் கிடைக்காது என பரப்புரை முன்னெடுக்கப்பட்டது. எனினும் கடனைப் பெறுவதற்குரிய நடவடிக்கையை ஜனாதிபதி வென்றெடுத்தார். நாட்டை நலிவு நிலையிலிருந்து மீட்டெடுத்தார். தற்போது முதுகெலும்பற்ற எதிரணிதான் நாட்டிலுள்ளது. இந்த எதிரணி தேவையில்லை.

ஹரின் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார ஆகியோர் தாய்வீடு திரும்பிவிட்டனர்.

கட்சி அரசியலை தள்ளிவைத்து நாட்டை மீட்பதற்கு அனைவரும் ஒன்றுபடவேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியை பலப்படுத்திக்கொண்டு முன்நோக்கிப் பயணிப்போம் - என்றார். (ச-44)

# காலிமுகத்திடல் போராட்டத்தின் பின்னணியில் அமெரிக்கத் தூதுவர்

## பொன்சேகா ஊடாக காய் நகர்த்தியதாக விமல் வீரவன்ஸ மீண்டும் குற்றச்சாட்டு

காலிமுகத்திடல் போராட்டத்தின் பின்னணியில் அமெரிக்கத் தூதுவரே உள்ளார் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்தபோது அவரின் மிரியான வீடு சுற்றிவளைக்கப்பட்டது. இராணுவத்தை அனுப்புமாறு சவேந்திர சில்வாவுக்கு, கோத்தாபய ராஜபக்ச தகவலுக்கு மேல் தகவல்களை அனுப்பியுள்ளார். அன்றையதினம் சவேந்திரசில்வா, ஐந்து நட்சத்திர விடுதியொன்றில் நடைபெற்ற திருமண நிகழ்வில் பங்கேற்றிருந்தார். கோத்தாபயவின் உயிருக்கு ஆபத்து என்ற தகவலை அவரின் பிரத்தியேக செயலாளர் ராஜபக்ச குடும்பத்துக்கு வழங்கியிருந்தார். இப்படியான அச்சுறுத்தலான சூழ்நிலையே காணப்பட்டது. ஆனால் மறுநாள் அதிகாலைதான் ஜனாதிபதியை சந்திக்க சவேந்திரசில்வா சென்றிருந்தார்.

மே 9ஆம் திகதி முதல் அதன் பின்னரான காலப்பகுதியில் சவேந்திர சில்வாவின் செயற்பாடுகளில் மாற்றங்கள் தென்பட்டன. மற்றுமொரு சம்பவத்தையும் குறிப்பிடுகின்றேன். அதுவும் மிக முக்கியமான நாளொன்று. இராணுவத்தில் உயர் பதவி வகிப்பவர், தனது [illegible] பழுதடைந்து விட்டதால் சவேந்திர சில்வாவின் வாகனத்தில் சென்றுள்ளார். அவ்வாறு செல்கையில் சவேந்திர சில்வாவுக்கு 13 அழைப்புகள் வந்துள்ளன. அவரும் 'யெஸ் சேர், யெஸ் சேர்' எனக் கூறி, அழைப்பை எடுப்பது யாரென வெளியில் காட்ட முற்படவில்லை. சவேந்திரசில்வாவுக்கு இவ்வாறு அழைப்பை எடுத்தவர் சரத் பொன்சேகா. சவேந்திர சில்வாவை மட்டுமல்ல இராணுவத்தில் இரண்டாம் நிலையில் உள்ள பிரதானிகளையும் வளைத்துப் போட பொன்சேகா முற்பட்டிருந்தார். பொன்சேகாவை இயக்கியது அமெரிக்கத் தூதுவர். அதனால்தான் 'அரகலய' பூமிக்கு எவ்வித அச்சுறுத்தலும் இன்றி பொன்சேகாவால் மட்டும் [illegible] இருந்தது' - என்றார். (ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் ஐ.தே.க.

## அகிலவிராஜ் காரியவசம் பெருமிதம்

கொழும்பு, மே 4

பல அவதூறு பரப்புரைகளுக்கு மத்தியிலும் சவாலை ஏற்று இந்த நாட்டை படிப்படியாக முன்னேற்றிவருகிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. இன்று ஐக்கிய தேசியக் கட்சி நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் கட்சியாக மாறியுள்ளது. இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மே தின நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

1956ஆம் ஆண்டு தேர்தலில் ஐ.தே.க. தோல்வியடைந்தபோது ஐக்கிய தேசியக் கட்சியின் சவப்பெட்டியில் ஆணி அடிக்கப்பட்டது எனக் கூறப்பட்டது. கட்சி புதைக்கப்பட்டது எனக் கூறப்பட்டது.

இரண்டாகப் பிரித்து ஐக்கிய தேசியக் கட்சியை அழிக்க முயன்றனர். ஆனால் இன்று ஐக்கிய தேசியக் கட்சி நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் கட்சியாக மாறியுள்ளது. நாடு வீழ்ச்சியடைந்த போது ரணில் விக்கிரமசிங்கவைத் தவிர வேறு யாரும் அந்தச் சவாலை ஏற்க முன்வரவில்லை.

இன்று அவர் இந்த நாட்டைப் படிப்படியாக முன்நோக்கிக் கொண்டு செல்கின்றார். 2048இல் வளர்ந்த நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்துக்கு அவர் தோள் கொடுத்துள்ளார்." - என்றார். (ச-22)

*சைவச்சிறுவர் இல்ல விவகாரம்;*

# மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமையக அதிகாரிகள் விசாரணை

யாழ்ப்பாணம், மே 4
திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச்சங்க சைவச் சிறுவர் இல்லத்தில் மார்ச் மாதம் 27ஆம் திகதி இடம்பெற்ற சம்பவத்துடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கொழும்பு அதிகாரிகள் குழு யாழ்ப்பாணத்துக்கு நேற்று வந்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

சைவச் சிறுவர் இல்ல விடுதி நிர்வாகத்துக்கு எதிராக நீதிமன்றில் தொடுக்கப்பட்டுள்ள வழக்கில், நிர்வாகத்துக்கு எதிராக வாக்குமூலம் வழங்கியவிடுதியின்முகாமையாளர் சிறுவர் நீதிமன்றத்தால் பணி இடைநிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து இல்லச் சிறுவர்கள் சிலரால் அந்த இல்லத்தின் நிர்வாக அலுவலகம் அடித்துடைக்கப்பட்டது.

இதனையடுத்து இந்தச் சம்பவத்தில் தொடர்புடைய சிறுவர்கள் என நான்கு பேரினது பெயர்கள் குறிப்பிட்டு கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் சைவவித்தியா விருத்திச்சங்கத்தின் தலைவரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. அவ்வாறு பெயர் குறிப்பிட்ட நான்கு பேரில் இருவர் மார்ச் 27 ஆம் திகதி முதல் காணாமற்போயுள்ளனர். அத்துடன் சிறுவர் இல்லத்தில் தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் என்று அடையாளப்படுத்தப்பட்ட 12 சிறுவர்கள், சிறுவர் நீதிமன்றத்தால் சான்றுபெற்ற பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர். சான்றுபெற்ற பாடசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்ட சிறுவர்கள் அண்மையில் நீர்வேலியிலுள்ள வேறொரு சிறுவர் இல்லத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் இந்தச் சம்பவங்கள் தொடர்பில் பத்திரிகைகளில் வெளியான செய்தியின் அடிப்படையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளை தனது சொந்தப் பிரேரணையாகஎடுத்து விசாரணைகளை ஆரம்பித்திருந்தது. அது தொடர்பான அறிக்கை கொழும்பிலுள்ள அதன் தலைமையகத்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து கொழும்பிலிருந்து அதிகாரிகள் குழு யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்துள்ளது. இந்த அதிகாரிகள் சிறுவர் இல்லத்துக்கு நேற்று நேரில் சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய அதிகாரிகளுடனும் இந்தக்குழுவினர் இன்று கலந்துரையாடவுள்ளனர் என்றும் தெரியவருகின்றது. (அ-ஒ,5)

# விருது மற்றும் ஊக்குவிப்பு வழங்கல்

ஏழாலை முத்தமிழ் மன்றமும் சனசமூக நிலையமும் இணைந்து நடத்திய முத்தமிழ்மன்ற விருது விழா மன்றத் தலைவர் நா.இலட்சுமிகாந்தன் தலைமையில் முத்தமிழ்மன்றக் கலாசார மண்டபத்தில் கடந்த 22ஆம் திகதி சனிக்கிழமை சிறப்புற நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஏழாலையைச் சேர்ந்த மூத்த ஓதுவார் சி.சிவசுப்பிரமணியம் திருமுறைச் செல்வர் எனும் பட்டமும், முத்தமிழ் விருது மற்றும் பொற்கிழி வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். அத்துடன் 2022ஆம் ஆண்டு தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த ஏழாலையில் அமைந்துள்ள ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை, ஏழாலை புனித இசிதோர் றோ.க.த.க. பாடசாலை, ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த 22 மாணவர்கள் வாழ்த்துக் கேடயமும், ஊக்குவிப்புப் பரிசிலும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (ய-66)







*மன்னார் முசலி பிரதேச செயலகப் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பொருண்மியம் நலிவுற்ற 26 குடும்பங்களுக்கு மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கத்தால் உலர் உணவுப் பொதிகள் கடந்த 24ஆம் திகதி திங்கட்கிழமை வழங்கப்பட்டன. (ய-60)*

## வட்டு. முருகனுக்கு இன்று தேர்



யாழ்ப்பாணம், மே 4
வட்டுக்கோட்டை அடைக்கலந்தோட்டம் கந்தசுவாமி கோயில் தேர்த் திருவிழா இன்று வியாழக்கிழமை அதிகாலை 5 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி காலை 7 மணிக்கு வசந்த மண்டப பூசையுடன் உள்வீதி வலம் வந்து காலை 9மணிக்கு தேரில் முருகப் பெருமான் ஆரோகணிப்பார். நாளை தீர்த்தத் திருவிழா நடைபெறவுள்ளது. (எ-இ)

## ஆசிரியர்களுக்கு...

முன்னெடுக்கப்படுகின்றது. அந்தப் பகுதியில் உள்ள சிலரால் ஆசிரியர்கள், அதிபருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதை அடுத்தே பாடசாலை உரிய இடத்தில் இயங்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

பூம்புகார் அரசினர் பாடசாலையில் கற்கும் தரம் -4 மாணவி ஒருவருக்கு ஆசிரியர் ஒருவர் தொலைபேசி அழைப்பெடுத்து பாலியல் ரீதியாக உரையாடினார் என்று தெரிவித்தே அந்தப் பகுதியில் உள்ள சிலர் பாடசாலைக்குள் புகுந்து அச்சுறுத்தியுள்ளனர். இது தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பில் மூவரைக் கைது செய்துள்ளனர்.

விசாரணைகளில் தொலைபேசி அழைப்பு வந்த இலக்கம் ஆசிரியரது இல்லை என்பதும், உரையாடியது ஆசிரியர் இல்லை என்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆசிரியர்களின் பாதுகாப்புக் கருதி அயல் பாடசாலையில் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் தற்காலிகமாக இடம்பெறுகின்றன. அடுத்த வாரம் பாடசாலை வழமைபோன்று நடைபெறும் என்று யாழ்ப்பாணம் வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

சர்ச்சைக்குரிய தொலைபேசி இலக்கம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்றும், இது தொடர்பில் சைபர் பிரிவுப் பொலிஸார் தொலைபேசி இலக்கத்துக்கு உரியவரை இனங்காண நடவடிக்கை எடுத்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-125)

## யாழ்ப்பாணத்துக்...

படும் இந்த வாழைப்பழங்கள் டுபாய்க்கு ஏற்றுமதி செய்யப்படவுள்ளன.

இந்தத் திட்டத்துக்காக 700 விவசாயிகளிடம் இருந்து வாழைக்குலைகள் எதிர்பார்க்கப்பட்ட போதும், 300 விவசாயிகளிடம் இருந்தே வாழைக்குலைகள் கிடைத்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் திட்டம் விவசாய அமைச்சின் கீழ் உள்ள விவசாய நவீனமயமாக்கப்பட்ட திட்டத்தின் கீழ் உலக வங்கியின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்படுகின்றது.


இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதற்காக பதிவு செய்யப்பட்ட சங்கம் ஒன்று உள்ளது என்றும், வாரத்துக்கு 40 ஆயிரம் கிலோ வாழைக்குலைகளைத் தற்போது ஏற்றுமதி செய்ய முடிகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது.

10 ஆயிரம் கிலோ வாழைப்பழங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டால் 12 ஆயிரம் டொலர் வருமானம் ஈட்ட முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-இ-17)

(தொடர்புடைய செய்தி உள்ளே)


## மரண அறிவித்தல்

பிறப்பு 16.05.1958 இறப்பு 03.05.2023



### இராசையா தர்மலிங்கம்

பலாலி தெற்கு விசாவிளானை பிறப்பிடமாகவும், காங்கேசன்துறை ஊராவில் மாங்கொல்லையை நிரந்தர வசிப்பிடமாகவும், புகையிரத வீதி மல்லாகத்தை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா தர்மலிங்கம் அவர்கள் நேற்று (03.05.2023) புதன்கிழமை சிவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா நாகம்மா தம்பதியரின் அன்பு புதல்வரும், காலஞ்சென்றவர்களான கணேசன் மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், யமுனாதேவியின் அன்புக் கணவரும், கமலாதேவி, கோபாலசிங்கம், கணேசலிங்கம், கமலாம்பாள் ஆகியோரின் அன்புச் சகோதரரும், தாரணி (பிரதேச செயலகம் நல்லூர்), பிரசாந் (வாகைத்தமிழ் இணைய வானொலி உரிமையாளர் -ஜேர்மனி), தினேஸ் (S-Lon விற்பனை பிரதிநிதி), நிசாந் (பொறியியலாளர்), சசிகாந் (BS Travel Pvt Ltd, Jaffna உரிமையாளர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், லதீசன் (ஆசிரியர், கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாலயம்), சோபிகா (பாலர்பாடசாலை - ஜேர்மனி), தனிசா (பிரதேச சபை சுன்னாகம்), பத்ரா ஆகியோரின் அன்பு மாமனாரும், சந்தோஸ், இலக்கியா, அஸ்வினி, நிஷானா, அக்ஷயன், ஜாதவ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.05.2023) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
076 642 7915 (CR 39779) A-1


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சட்டவிரோத...

**மக்கள் போராட்டம்**

வலி.வடக்கில் தையிட்டியில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்ட தமிழ் மக்களின் காணிகள் இன்னமும் விடுவிக்கப்படாத நிலையில், அங்கு பௌத்த விகாரை ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுவரும் இந்தப் பௌத்த விகாரையை அகற்றக்கோரி தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. நேற்று ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டம் நாளைவரை முன்னெடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தையிட்டியில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டு இதுவரை விடுவிக்கப்படாத பொதுமக்களின் காணிகளுக்குள் பௌத்த விகாரை அமைக்கப்பட்டுவரும் நிலையில், அதைச் சூழவுள்ள தமிழ் மக்களின் காணிகளும் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

கையகப்படுத்தப்பட்டுள்ள தமிழ் மக்களின் காணிகளை விடுவிக்கக்கோரியும், சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுவரும் பௌத்த விகாரையை அகற்றக்கோரியும் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் இணைந்து நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

பருத்தித்துறை வீதியில், தையிட்டி கலைவாணி வீதி முகப்பில் ஆரம்பிக்கப்பட்ட கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் பேரணியாக நகர்ந்து தையிட்டியில் அமைக்கப்படும் விகாரைவரை சென்றது. விகாரைக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. 14 குடும்பங்களுக்குச் சொந்தமான சுமார் 100 பரப்புக் காணிகளை விடுவிக்கவேண்டும் என்றும், சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுவரும் பௌத்த விகாரைக் கட்டுமானத்தை அகற்றவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

**பொலிஸார் அராஜகம்**

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அந்தப் பகுதியில் கொட்டகைகள் அமைத்துத் தங்கியிருந்து சுழற்சிமுறையிலான தொடர்போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். ஏற்கனவே அந்தப் பகுதியில்



பெரும் எண்ணிக்கையில் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது. இந்தநிலையில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களை அச்சுறுத்தி அங்கிருந்து அகற்றும் நடவடிக்கையைப் பொலிஸார் நேற்றிரவு ஆரம்பித்தனர். அந்த இடத்தில் இருந்து அகன்று செல்லாவிட்டால் கைது செய்யப்படுவீர்கள் என்று அச்சுறுத்திய பொலிஸார், போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் அமைத்திருந்த கொட்டகைகளையும் அகற்றினர். போராட்டத்தில் பங்குகொண்டிருந்த மக்களை அச்சுறுத்தி அங்கிருந்து அகற்றினர். நேற்று இரவு முழுவதும் இந்தப் பதற்ற நிலைமை தொடர்ந்தது.

"இந்தப் போராட்டத்தில் 50 க்கும் மேற்பட்டவர்கள் பங்குகொண்டிருந்தனர். இங்கு வந்த பொலிஸார் உடனடியாக இங்கிருந்து அகன்று செல்லாவிட்டால் கைது செய்யப்படுவீர்கள் என்று போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களை அச்சுறுத்தினர். பலரை அங்கிருந்து பலவந்தமாக அகற்றினர். போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் தங்குவதற்காக அமைத்திருந்த கொட்டகைகளையும் அகற்றினர். 'போரில் வென்ற எங்களுக்கு உங்களை என்ன செய்வது என்று தெரியும்' என்று அவர்கள் எமக்குக் கூறினார்கள். நாம் போராட்டத்தைக் கைவிடமாட்டோம், எம்மைக் கைது செய்வதாயின் கைது செய்யுங்கள் என்று தெரிவித்தோம்" என்று போராட்டத்தில் கலந்துகொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்தார்.

**வீதிகளில் தடை**

போராட்டம் நடைபெறும் இடத்துக்கு இரு பக்கங்களிலும் சற்றுத் தூரத்தில் தடைகளை ஏற்படுத்தி அங்கு வேறு எவரும் செல்லாதவாறு பொலிஸார் தடைகளை ஏற்படுத்தினர். இரவு 8.30 மணியளவில் உழவியந்திரங்களில் முட்கம்பிகள் கொண்டுவரப்பட்டு வீதித் தடை இறுக்கமாக்கப்பட்டது. விகாரைக்கு முன்பாக போராட்டம் நடத்திய மக்கள் அச்சுறுத்தி அகற்றப்பட்ட நிலையில் நேற்று இரவு 11 மணியளவில் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் உட்பட மூவர் விகாரைக்கு முன்பாக தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபட்ட வண்ணம் இருந்தனர். அந்தப் பகுதிக்குச் செல்ல ஏனையோரைப் பொலிஸார் அனுமதிக்கவில்லை. வீதித் தடைகளில் குவிக்கப்பட்டிருந்த பொலிஸாரும், இராணுவத்தினரும் கடும்போக்குடன் நடந்துகொண்டனர். போராட்ட இடத்துக்குச் செல்ல முயன்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பேச்சாளரும், சட்டத்தரணியுமான க.சுகாஷ் தடுத்து நிறுத்தப்பட்டார். "குடித்து விட்டா வந்திருக்கிறீர்கள்?, "வெளிநாட்டுப் பணம் பெறவே இப்படிச் செய்கிறீர்கள்" என்று பொலிஸார் அநாகரிகமான முறையில் அவருடன் தர்க்கப்பட்டதைக் காணமுடிந்தது. அங்கு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பொலிஸார் சரளமாகத் தமிழில் உரையாடினர்.

**ஊடகவியலாளர்களுக்குத் தடை**

செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களும் வீதித் தடைகளில் தடுத்து நிறுத்தப்பட்டனர். இது தொடர்பில் பொலிஸ் பொறுப்பதிகாரியுடன் ஊடகவியலாளர்கள் பேச முயன்றபோது, அங்கிருந்த பொலிஸார் லத்தியை ஓங்கி அச்சுறுத்தினர். தங்களுக்கு மேலிடத்தில் இருந்து வந்த உத்தரவுக்கு அமைய அங்கு செய்தி சேகரிக்க அனுமதிக்க முடியாது என்று பொலிஸார் விடாப்பிடியாக நின்றனர். அதேநேரம் வீதியில் பயணித்த பொதுமக்கள் கடும் சோதனைக்குட்படுத்தப்பட்டதையும் காண முடிந்தது.

**இராணுவமும் குவிப்பு**

விகாரை அமைந்துள்ள பகுதியில் இராணுவத்தினரின் பிரசன்னமும் அதிகமாகக் காணப்பட்டது. இந்தச் செய்தி அச்சுக்குப் போகும் வரையில் அங்கு கடும் பதற்றமான நிலைமை காணப்பட்டது. அதேவேளை, இந்த விகாரைக்கு கலசம் வைக்கும் நிகழ்வு தொடர்பாக இராணுவ இணையத்தளத்தில் யாழ்ப்பாண மாவட்டக் கட்டளைத் தளபதியின் முயற்சிக்கு அமைய இந்த விகாரை அமைக்கப்பட்டுள்ளது என்று பதிவிடப்பட்டுள்ளது.

(அ-எ-26,66,125)

## காணி...

இரண்டு திணைக்களங்களிலிருந்தும் விடுவிக்கப்படவேண்டிய காணிகளின் விவரங்கள் நேற்றைய கூட்டத்தில் காட்சிப்படுத்தப்பட்டன. இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், வனவள மற்றும் வனஉயிரிகள் திணைக்களங்களால் இப்போது ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளில் 1985 ஆம் ஆண்டு குடியிருப்பு மற்றும் விவசாயம் முன்னெடுக்கப்பட்ட காணிகளை விடுவிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். ஆனால், இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ள விவரங்களை அதற்குரியவாறு இல்லை. எனவே இதனை திருத்தியமைக்கவேண்டும் என்று குறிப்பிட்டார். இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ள விவரங்கள் தவறானவை என்று குறிப்பிட்டு அதனைப் பதிவு செய்யவேண்டும் எனத் தெரிவித்தார். திருத்தியமைக்கப்பட்ட பின்னர் இதனை அனுமதிக்கலாம் என்றும் குறிப்பிட்டார்.

(அ-ஒ,5)

## அதானி...

குழு அனுமதிவழங்கவில்லை.

இந்தத் திட்டம் தொடர்பில் மக்களுக்குப் போதிய தெளிவூட்டல் மேற்கொள்ளப்படவில்லை என்ற குற்றச்சாட்டை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் முன்வைத்திருந்தார். மக்களுக்கு போதிய விளக்கமளித்த பின்னர் இதற்கான அனுமதியை வழங்கலாம் என்று அவர் தெரிவித்தார். அத்துடன் காற்றாலை மூலமான மின் உற்பத்திக்கு அனுமதி வழங்கப்பட்ட பின்னர் அந்த நிறுவனம் கூட்டாண்மை சமூக பொறுப்பு (சி.எஸ்.ஆர்.) ஊடாக எவ்வகையான உதவிகளை அந்தப் பகுதிக்கு மேற்கொள்ளும் என்பது தொடர்பில் நேற்று வினவப்பட்டது. இவை தொடர்பில் மக்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டு அவர்கள் இணங்கினால் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் அனுமதி வழங்கமுடியும். அதற்கு அமைவாக மக்களுக்கு விளக்கமளிக்கும் கலந்துரையாடலை முதலில் ஒழுங்கு செய்வதென்று நேற்றுத் தீர்மானிக்கப்பட்டது.

(அ-ஒ,5)

## மீற்றர்...

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோது யாழ். மாவட்டச் செயலர் ஆ.சிவபாலசுந்தரன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் முச்சக்கர வண்டிக் கட்டணங்கள் அதிகளவில் அறவிடப்படுகின்றன என்று தொடர்ச்சியாகக் கிடைத்த முறைப்பாடுகளை அடுத்து, இது தொடர்பில் தீர்மானம் ஒன்றை எடுப்பதற்கான கலந்துரையாடல் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. முச்சக்கர வண்டிச் சங்கத்தினர், மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உத்தியோகத்தர்கள், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, வர்த்தக சங்கப் பிரதிநிதிகள், யாழ்ப்பாணம் மாநகர சபையின் பிரதிநிதி, வடக்கு மாகாண போக்குவரத்து அதிகாரசபைத் தலைவர், நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் முச்சக்கர வண்டிச் சேவை தொடர்பான பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன. அளவுக்கதிகமான ஒலிகளை எழுப்புவது, அநாவசியமான கண்ணாடிகளைப் பொருத்துவது, தேசியக் கொடியை அவமதிக்கும் வகையில் சீரற்ற வகையில் பொருத்துவதுபோன்றவிடயங்களும்ஆராயப்பட்டன. பயணிகள் மற்றும் வீதியில் பயணிப்பவர்களை அச்சமூட்டும் வகையில் அதிக ஒலிகளை எழுப்பும் கருவிகளை முச்சக்கர வண்டிகளில் பொருத்துவதைத் தடை செய்தல் என்று சுட்டிக்காட்டப்பட்டதுடன், முச்சக்கரவண்டிச் சாரதிகள் மரியாதைக்குரிய ஆடைகளை அணிவது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

பதிவு செய்யப்படாத முச்சக்கர வண்டிகள் யாழ். மாநகரப் பகுதியில் சேவையில் ஈடுபடுவது பெரும் தொல்லையாக உள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டதுடன், பதிவு செய்யப்படாத முச்சக்கர வண்டிகளைப் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

2017ஆம் ஆண்டு முதலாம் இலக்க மோட்டார் வாகனச் சட்ட ஒழுங்குவிதி அதாவது வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிக்கு அமைய நாடு முழுவதிலும் முச்சக்கர வண்டிகளுக்கு உரிய கட்டண மீற்றர் பொருத்தப்பட்டு கட்டணம் அறவிப்படவேண்டும். இது யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நடைமுறையில் இல்லை. மாவட்டத்தில் கட்டணங்கள் அதிகமாக உள்ளன என்று பொதுமக்களிடம் இருந்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அதனால் முச்சக்கரவண்டிகளுக்கு கட்டண மீற்றர் பொருத்த வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

முச்சக்கர வண்டிகளுக்கு கட்டணமானிகளைப் பொருத்தும் நிறுவனத்தினரை அழைத்துஇதுதொடர்பில்கலந்துரையாடிய போது, ஒரு நாளைக்கு குறைந்தது 40 முச்சக்கர வண்டிகளுக்கு கட்டணமானி பொருத்தமுடியும் என்று குறிப்பிட்டனர்.

போக்குவரத்து அதிகாரசபையின் கணக்கெடுப்பின்படி, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 14 ஆயிரத்துக்கும் அதிகமான முச்சக்கரவண்டிகள் சேவையில் உள்ளன. யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் 2 ஆயிரத்து 25 முச்சக்கர வண்டிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் ஜூலை மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகள் கட்டணமானி பொருத்தவேண்டும். ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் கட்டணமானி பொருத்தப்படாத முச்சக்கர வண்டிகள் சேவையில் ஈடுபட அனுமதிக்கப்படமாட்டாது. அத்தோடு தரிப்பிடங்களில் தரித்து நிற்பதற்கான அனுமதியும் இரத்துச் செய்யப்பட்டு, மீண்டும் பதிவுகளை மேற்கொள்ள அனுமதிப்பதில்லை என்றும் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

இதற்குரிய ஒழுங்குகளை யாழ். மாநகர சபையும் மேற்கொள்ளவேண்டும். இந்த விடயத்துக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று முச்சக்கர வண்டிச் சங்கமும் தெரிவித்துள்ளது என்று யாழ். மாவட்டச் செயலர் தெரிவித்தார்.

(அ-எ-26)

## அடுத்தவாரம்...

ஒன்று நடைபெறவுள்ளது.

இந்தச் சந்திப்புக்கு வடக்கு - கிழக்கைப் பிரதிநித்துவம் செய்யும் அனைத்துத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அழைக்கப்படவுள்ளனர். அதற்கான உத்தியோகபூர்வ அழைப்பு இன்று அல்லது நாளை அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பப்படும் என்று ஜனாதிபதி செயலகத் தகவல்கள் தெரிவித்தன.

11 ஆம் திகதி பொதுப் பிரச்சினைகள் தொடர்பாகவும், 12ஆம் திகதி அதிகாரப் பகிர்வு தொடர்பாகவும், 13 ஆம் திகதி அபிவிருத்தி தொடர்பாகவும் பேசப்படும் என்று அறியமுடிகின்றது. இந்தச் சந்திப்புக்கள் முதல் இரு நாள்களும் மாலை 5 மணிக்கு ஆரம்பிக்கும் என்றும், இறுதி நாள் மாலை 4.30 மணிக்கு ஆரம்பிக்கும் என்றும் ஜனாதிபதி செயலகத் தகவல்கள் தெரிவித்தன.

(அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாலிக்கொடி மோசடியில் ஈடுபட்டவர் எமது சங்கத்தின் உறுப்பினர் அல்லர்

## யாழ்ப்பாணம் மாவட்ட விஸ்வகர்ம நகைத்தொழிலாளர் சங்கம் விளக்கம்

யாழ்ப்பாணத்தில், தாலிக்கொடி செய்துதருவதாகத் தெரிவித்து 12 லட்சம் ரூபா பணத்தைப் பெற்று ஏமாற்றிய நகைத்தொழிலாளி அண்மையில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில், அவருக்கும் தமக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று யாழ்ப்பாணம் மாவட்ட விஸ்வகர்ம நகைத்தொழிலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

தாலிக்கொடி செய்துதருவதாகத் தெரிவித்து 12 லட்சம் ரூபா பணத்தைப் பெற்ற நபரொருவர், பணம் கொடுத்தவர்களை ஏமாற்றிவிட்டு கடையைப்பூட்டிவிட்டுத் தலைமறைவாக இருந்த நிலையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்ற செய்தி உதயனின் 18ஆம் திகதிய பதிப்பில் வெளிவந்தது.

இந்த நிலையிலேயே கைதான சந்தேகநபர் தமது சங்கத்தில் பதிவுசெய்யப்படாத உறுப்பினர் என்றும் இதற்கும் தமக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்றும் யாழ்ப்பாணம் மாவட்ட விஸ்வகர்ம நகைத்தொழிலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தச் சங்கம் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:

உதயனின் 18ஆம் திகதிய பத்திரிகைச் செய்தியில் குறிப்பிடப்படும் நபர் எமது சங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட நபர் அல்லர். இவர் சங்கத்தில் பதிவை மேற்கொள்ளாமல்தொழில்செய்யும் நபர். இவ்வாறானவர்களின் செயற்பாட்டால் சங்கத்தில் பதிவுகளை மேற்கொண்டு நேர்மையாகத் தொழிலில் ஈடுபடும் எம் உறுப்பினர்கள் பாதிக்கப்படுகின்றனர். சங்கத்தின் பதிவில் உள்ள தொழிலாளர்களால் இதுபோன்ற அசம்பாவிதங்கள் எப்போதும் ஏற்பட்டதில்லை என்பதை அறியத்தருகின்றோம் - என்றுள்ளது.

(ம)


**Efly Jaffna Pvt LTD**

**Vacant Wanted**

Air Line Ticketing Exprience
1) Ticketing Basic Experience
2) English Skills
3) Spoken English AS Well

Contact No. Watsapp
004179 1060 606
E-mail Address-info@efly.ch

**விசேட விலைக்கழிவு**

இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்தின் யாழ். மாவட்ட விநியோக உரிமை முகவராகிய சிவா நறுமணப் பூங்காவில். ஆயுர்வேத கூட்டுத்தாபனத்தின் உற்பத்திப் பொருள்களை மொத்தமாக கொள்வனவு செய்யும் வைத்தியர்கள், வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

021 222 2567

சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சத்திரச் சந்திக்கு அருகாமையில்)

**விற்பனைக்கு**

900 சதுரஅடி விஸ்தீரணமான தகரக் கொட்டகை விற்பனைக்குண்டு.
(CS/50292) AH-1

077 237 8736

**வேலையாட்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் அழகுசாதனப் பொருட்கள் விற்பனை நிலையமொன்றில் பணிபுரிய ஆண், பெண் இருபாலாரிலுமான வேலையாட்கள் தேவை. யாழ் நகரப்பகுதியை சேர்ந்தவர்களாயின் வரவேற்கத்தக்கது. (சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.)

077 716 4125, 076 343 2145

**வேலைவாய்ப்பு**

யாழில் இயங்கும் பிரபல நிறுவனமொன்றில் பணிபுரிவதற்கு அலுவலகப் பணியாளர்கள் மற்றும் தொண்டர்கள் (Volunteers) வடமாகாணம் முழுவதும் தேவை. ஏனையவை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

077 149 9094, 021 221 7557

**காணி விற்பனைக்குண்டு**

யாழ்ப்பாணம் புத்தூரில் 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, புத்தூர்ச்சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100 m தூரத்தில்
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1km தூரம்
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- சோமாஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1km தூரம்
- 1 பரப்பின் விலை ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் மட்டும் (120,000/=)

பார்வையிடும் நேரம் :
காலை 06.00 மணியிலிருந்து மாலை 06.00 மணிவரை

தொடர்பு:-076 755 8606 077 638 5683


# மரண அறிவித்தல்



தோற்றம் 10 - 10 - 1940

மறைவு 30 - 04 - 2023

## வைரமுத்து நாகேஸ்வரி

கலைமகள் வீதி, அரியாலை மேற்கு, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து நாகேஸ்வரி கடந்த (30.04.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகமணி - ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வைரமுத்து (கபில்) அவர்களின் பாசமிகு மனைவியும், சௌந்தகுமார் (ஜேர்மனி), நந்தினிகுமாரி (ஜேர்மனி), வசந்தகுமாரி, வசந்தகுமார் (ஜேர்மனி), அசோக்குமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ரஜனி (ஜேர்மனி), செல்வரட்ணம் (ஜேர்மனி), சுரேந்திரன் (இத்தாலி), சர்மிளா (ஜேர்மனி), மேகலை (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான சற்குணம், மகாலிங்கம், சாந்தநாயகி, இந்திராணி மற்றும் யோகம்மா ஆகியோரின் அருமைச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, கார்த்திகேசு, சண்முகம், தாமு, ஏரம்பு, செல்லையா, பீதாம்பரம், முத்துராசா, பூநாதன் மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், காலஞ்சென்ற தனுஷ்கா மற்றும் ஸ்ரீபன்ஷன், கிங்ஸ்ரன், சிந்தியா, டீப்திகா, கவிநயா, அபிநயா, நிஷா, யதுஷா, கபில்ராஜ், ஆகாஷ், அஸ்வத், ஜெயரஞ்சன், குகபாலா, வினோத், தானியா, கரிசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஜெனுஷா, சோன் ஆரியா, ஆன் ஒவ் லியா ஆகியோரின் அருமைப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.05.2023) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் ஒருமணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 3/8, கலைமகள் வீதி,
அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.

(CS/50298)AH-1

தகவல்:
குடும்பத்தினர்


**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கைதடி A-9 பிரதான வீதியுடன் 05 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✓ 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ✓ நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- ✓ திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- ✓ ஒரு பரப்பின் விலை 35 இலட்சம்

பார்வையிடும் நேரம்:-
காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.

தொடர்புகளுக்கு: ஜெயம்
077 8147 389
077 9865 457

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 04 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✓ சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- ✓ A-9 பிரதான வீதியில் இருந்து 700M தூரம்.
- ✓ காய்க்கும் தென்னைகள் 24 உள்ளன.
- ✓ 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ✓ ஒரு பரப்பின் விலை 19 இலட்சம் முதல் 17 இலட்சம் வரை

பார்வையிடும் நேரம்:- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.

தரகர் தேவையில்லை.

தொடர்புகளுக்கு: ஜெயம்
077 8147 389
077 9865 457


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.